Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி என் 49

மலர் 4 யாழ்ப்பாணம் சுபகிருது தை 5 ஆம் நாள் ஷஃபான் பிறை21 (18-1-63) வெள்ளிக்கிழமை இதழ் 3ɜ

யாழ்ப்பாண மக்களுக்கோர் நற்செய்தி!
புதிதாகத்திறக்கப்பட்டஸ்தாபனம்




அல்பேட் எதிரிசிங்க
பிரசித்தமான கண்பரிசோதகரும்
மூக்குக்கண்ணுடி விற்பனேயாளரும்
45, மெயின்வீதி, : யாழபபாணம்.

# கலாசாலையை கல்வி இலாகா மூடியது!

## முகாமையாளர் மேல்பூட்டுப் பூட்டினுர்?

### திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் சம்பவம்

**யாழ்ப்பாணம், வியாழன்**

**யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரியகலாசாலை அரசாங்கத்தால் மூடப்பட்டதைத் தொடர்ந்து, அக்கலாசாலை முகாமையாளர் கலாசாலை வளவுக்குள் எவரும் பிரவேசிக்கமுடியாதபடி தாழிட்டுப் பூட்டியிருப்பதாக அறியப்படுகிறது.**

இக்கலாசாலை கடந்த 15-ம் திகதியுடன் மூடப்பட்டு ஆசிரியர்களும் மாணவர்களும் வேறு கலாசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஆசிரியர்கள் கொழும்புத்துறை, நல்லூர் ஆகிய கலாசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். ஆசிரிய மாணவர்களிற் பெண்கள் கோப்பாய் மகளிர் பயிற்சிக்கலாசாலைக்கும், ஆண்கள் நல்லூர் பயிற்சிகக லாசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

கல்வி இலாகாவின் இக்நடவடிக்கையை எதிர்த்தே கலாசாலை வளவு பூட்டப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இக்கலாசாலை முத்துத்தம்பி வித்தியாசாலை விஸ்தரிப்புக்காகப் பயன்படுத்தப்படலாமெனவும் அப்பாடசாலை உயர்தரப்பாடசாலையாக உயர்த்தப்படலாமெனவும் கல்வி இலாகாவைச்சேர்ந்த உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார். வடபகுதிக் கல்விக் கந்தோராகக் கலாசாலைக் கட்டடம் மாற்றப்படுமா என்பதுபற்றி ஆலோசிக்கப்படவில்லை யெனவும் அவர் தெரிவித்தார்.

## '21 தொகுதிகளாக பிரிக்க வேண்டும்'

### மாநகரசபை அங்கத்தினர்கள் அவசர மகாநாடு

**யாழ்ப்பாணம், வியாழன்**

இன்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாநகரசபை அங்கத்தினர்களின் அவசர மகாநாட்டில் யாழ்ப்பாண மாநகரசபைத் தொகுதிகளை இதர நகரசபைத் தொகுதிகளாகப் பிரித்ததுபோல் 21 தொகுதிகளாகப் பிரிக்கவேண்டுமென்றும், ஒரு வட்டாரத்தில் ஏறக்குறைய 2000 வாக்காளர்கள் இருக்கும்படியாகப் பிரிக்கவேண்டுமென்றும், கரையோர மக்களுக்கு அதிகப் பிரதிநிதித்துவம் வழங்கவேண்டுமென்றும், அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை வெளியான அரசாங்க அறிக்கையில் ஈச்சமட்டை வட்டாரத்திலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து அதைப் பஷையூர் வட்டாரமாக்குவதென்றும், 11-ம், 12ம் முஸ்லிம் வட்டாரத்திலிருந்து ஒரு பகுதியைப் பிரித்து அதை நாவாந்துறை வட்டாரமாக்குவதென்றும் கூறப்பட்டிருந்தது.

இதுபற்றி ஆலோசிக்க போதுமா[illegible] காலமில்லாததால், அவசர மகாநாடு நடைபெற்றது. தற்போது வெளியூர் சென்றிருக்கும் குவாஸி சல்தான் மகாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

1962-ம் ஆண்டு பொதுக்கூட்டங்களிலும், இவ்வாண்டு தைமாதக் கூட்டத்திலும் தீர்மானித்ததற்கேற்ப மகாநாட்டில், மாநகரசபையை 21 தொகுதிகளாகப் பிரிக்கவேண்மென முடிவுசெய்யப்பட்டது ஈச்சமட்டை தொகுதியில் 2500 வாக்காளர்களும், 11, 12-ம் முஸ்லிம் வட்டாரத்தில் 5000 வாக்காளர்கள் மட்டும் இருப்பதால் இதைப் பிரிப்பது சாத்தியமில்லாமலிருக்கும் என்றும் மகாநாடு கருதுகிறது

தாழ்த்தப்பட்டவர்களுக்கு திரு. செல்லத்துரையும், இஸலாமியர்களுக்கு ஹாஹி அபுசாலியும், மற்றும் சிறுபான்மையோருக்கும் அதிக பிரதிநிதித்துவம் வேண்டுமென்றும் யோசனை தெரிவித்தனர்.

## "அநீதி நீடிக்குமானல் இணையும் நிலை ஏற்படலாம்"

### முதலியார் சின்னத்தம்பி எச்சரிக்கை

### கல்விக் கொள்கைக்கு கண்டனம்

**யாழ்ப்பாணம், வியாழன்**

இந்நாட்டின் கல்விக்கொள்கை மிகுந்த குழப்பமாகவிருக்கிறது. இந்நாட்டில் வாழும் தமிழர்கள் பிறந்ததும் வாழப்போவதும் இறப்பதும் இலங்கையில்தான். ஆனல் நாம் பலவகையிலும் புறக்கணிக்கப்பட்டுவருகிறேம். இந்த அநீதியான போக்கு தொடர்ந்தும் இருக்குமானல் இலங்கையில் வடபகுதியும் இந்தியாவின் தென்பகுதியும் இணைந்து செயல்படும் நிலையும் ஏற்படலாம்.

இவ்வாறு முதலியார் செ. சின்னத்தம்பி யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி உயர்கலைக்கழகத் திறப்புவிழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி முகாமையாளர் சபையினல் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் உயர்கலைக்கழகத்தை முதுபெரும் டாக்டர் எஸ். சுப்பிரமணியம் திறந்துவைத்தார். "கடந்த 100 ஆண்டுக்காலமாக யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி கல்வித்துறையில் சிறந்த தொண்டாற்றி வருகிறது. சிறந்த கல்விமான்களையும் தலைவர்களையும் சிறந்த பிரஜைகளையும் இக்கல்லூரி இந்நாட்டுக்கு வழங்கியுள்ளது, வடபகுதியின் கல்வி உயர்வுக்கு இக்கல்லூரி மகத்தான தொண்டாற்றியுள்ளது. இத்தகைய கல்வி ஸ்தாபனங்களின் சேவைக்கு நாம் நன்றியுடையவர்களாக இருப்போம். நாட்டுக்கு ஏற்ற கல்வி இன்னமும் புகட்டப்பட அரசாங்கம் உருப்படியான நடவடிக்கையெடுப்பதாகத் தெரியவில்லை. இன்றைய கல்விக் கொள்கையால் தேடுவாரற்றுக் கிடக்கும் ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு இந்த உயர் கலைக்கழகம் விமோசனம்

(8ம் பக்கம் பார்க்க)

## 'யாழ்ப்பாணப் பகுதியில் அதிக ஆசிரியர்கள்இப்போதுஇல்லை'

### பார்லிமெண்டில் மந்திரி அளித்த பதில்

**கொழும்பு, வியாழன்**

இன்றைய பார்லிமெண்ட் கூட்டத்தில் திரு. ஏ. சிவசுந்தரத்தின் கேள்வியொன்றுக்கு கல்விமந்திரியின் சார்பாகப் பதிலளித்த திரு. மைத்திரிபால சேனநாயக்கா, யாழ்ப்பாணப் பகுதியில் அளவுக்கதிகமான ஆசிரியர்கள் இருந்தார்கள் என்றும், இப்போது நிலைமை சீராக்கப்பட்டிருப்பதாயும், யாழ்ப்பாணப் பகுதியில் அதிக ஆசிரியர் தற்சமயம் இல்லை என்றும் கூறிஞர்.

கூட்டம் ஆரம்பமாகியபோது முக்கிய அலுவல்களை முன்னிட்டு சபை குறிக்கப்பட்ட நேரத்திற்குமேல் அதிகநேரம் நடைபெறவேண்டுமென சபை முதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா பிரேரணை செய்தார்.

சீன-இந்தியப் பிரதமர்களுடன் நடத்திய சம்பாஷணை பற்றியும், பிரதமரின் தூதுபற்றியும் அரசாங்கம் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டிய விஷயத்தை டாக்டர் நாகநாதன்கிளைவூட்டினர்.

தற்சமயம் அறிக்கை ஒன்

8 பக்கம்பார்க்க)

## ஆறு கொள்ளையர் பலி!

**போபால், ஜன. 16**

மத்திய பிரதேசத்தில் பிந்து ஜில்லா மால்புரா என்ற இடத்தில் கொள்ளையர் கோஷ்டிக்கும் பொலிசாருக்குமிடையே நடைபெற்ற சண்டையில் 6 கொள்ளையர் மாண்டனர்.

## "ஆன்மீக நெறியை உலகில் பரப்பியவர்"

### விவேகானந்தர் நாற்ருண்டு விழாவில் காமராஜர் அஞ்சலி

**புதுடில்லி, ஜன. 17**

சுவாமி விவேகானந்தரின் நூற்ருண்டு விழாக்கொண்டாட்டம் இன்று இந்தியாவின் பல பாகங்களிலும் உலகின் பல பகுதிகளிலும் ஆரம்பமாகின.

தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் ஆயிரம் ஏழைகளுக்கு இன்று அன்னதானம் வழங்கப்பட்டது. ராம கிருஷ்ண மடத்தில் 100 எண்ணெய் விளக்குகளில் தீபமேற்றப்பட்டு பிரார்த்தனையும் பஜனையும் நடைபெற்றது.

சுவாமி விவேகானந்தரின் நினைவாக இந்திய தபால் இலாகா வெளியிட்ட தபால் முத்திரை விற்பனையை முதன் மந்திரி கே. காமராஜர் ஆரம்பித்துவைத்துப் பேசுகையில், "பாரதத்தின் ஆன்மீகச் செய்திகளை உலகத்துக்குத் தெரிவித்துப் பாரதத்தின் பெருமையை உலகம் முழுவதிலும் பரப்பிய தவப்புலவர் சுவாமி விவேகானந்தர்" என்று கூறினர்.

கஷ்ட நிலையிலுள்ள மக்களுக்கு ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தினர் ஆதரவும் உதவியும் அளித்துத்தொண்டு [illegible] செய்வதை முதன் மந்திரி பாராட்டினர்.

சென்னை நகரின் பல வேறு பகுதிகளிலும் சுவாமி விவேகானந்தரின் உருவப் படம் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. கோயம் புத்தூரிலுள்ள பள்ளிக்கூடங்களிலும் கல்வி ஸ்தாபனங்களிலும் [illegible]வாமி விவேகானந்தரின் உ[illegible]ப்படங்கள் திரைநீக்கம் [illegible]சய்து வைக்கப்பட்டன

## வரி விளம்பரம்

சிறந்த சேமிப்பு
அதிக ஆதாயம்
உயர்ந்த வட்டி
6%
உறுதியான இடம்
சிலோன் றிசேவ்
லிமிற்றெட், வங்கி
யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

பண்டத்தரிப்பு - மாதகல் றோட்டுக்கு அருகாமையில் 18 பரப்பு கிணற்றோடு கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு கீழ்வரும் விலாசத்தில் விண்ணப்பிக்கவும். இல.60, 3- ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 649

### தேவை

யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலிருக்கும் சூரியப்பிரகாஸ் ஹாட்வெயர் ஸ்டோருக்கு ஒரு ஆள் தேவை. இரும்புக் கடை வியாபாரத்தை பொறுப்பேற்று நடத்தக்கூடியவராயும் கடிதப் போக்குவரத்து, கொள்முதல், தற்போதைய மாக்கற் நிலைபரம், உதவியாட்களை சார்திக முறையில் நடத்தக்கூடிய தன்மை முதலியவைகளில் தேர்ச்சிபெற்றவராக இருக்க வேண்டும். பிணைப்பணம் ரூபாய் 1000/-. சம்பளம் ரூபாய் 150/-தொடக்கம் 500/- வரை. யாழ்ப்பாணம், கண்டி வீதி, 88-ம்நம்பர் இல்லத்தில் முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 4 மணி வரை நேரில் விண்ணப்பிக்கவும். 650

### St. John's Academy

Chundikuli, Jaffna.

Classes for the G. C. E. Ord. and Advanced Levels; H. S. C. and University Entrance will begin on Monday the 21st inst.

All applicants will report at the Academy Office at 10 a.m. on the same day and get thier Admission Cards

J. C. Handy,
Registrar.

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கூற்றலோக் இனும். தொய்வுக்கு 10நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாயபிள்ளையார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## புதிய நிர்வாகிகள்

யாழப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கலைவாணி ருது விவாக பிரசவ அந்தியகால் லாபநிதிச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. இ. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. சு. வை. முத்தையா, உபதலைவர் திரு. சி. சீவரத்தினம், காரியதரிசி திரு. ப. த. நடராஜா, உபகாரியதரிசி திரு. வை. இராசரத்தினம், தனாதிகாரி திரு. சி. சிவசுப்பிரமணியம் பிள்ளை.

நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## வட இலங்கை பாடசாலை ஊழியர் சங்கம்

யாழ்ப்பாணம், வியாழன்

வட இலங்கை பாடசாலை ஊழியர் சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் தலைவர் திரு. க. சிவக்கொழுந்து (யாழ். இந்துக்கல்லூரி) தலைமையில் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் பங்குபற்றிய பல ஊழியர்கள் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதின் பயனுல் ஏற்பட்டுள்ள குறைகளை எடுத்துக் கூறினர். பாடசாலைகளின் வளர்ச்சிக்கு ஆசிரியர்களுடன் சேர்ந்து தொண்டாற்றிய பாடசாலை ஊழியர்களுக்கு நியாயம் வழங்க அரசாங்கம் தவறிவிட்டது என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

சில பாடசாலை ஊழியர்கள் 30 ஆண்டுகள் சேவைசெய்திருந்த போதிலும் அவர்கள் சேவை சம்பள உயர்வுக்கு ஏற்றுக்கொள்ளப் படவில்லை. இவர்களுக்கு பென்சன் வசதி இல்லை. அத்துடன் இவர்கள் நாள் சம்பள ஊழியர்களாகவே கணிக்கப்படுகிறார்கள். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற காலத்தில் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட உறுதிக்கு இந்த செய்கை முழுதும் மாறானதென பல ஊழியர்கள் சுட்டிக்காட்டினார்கள். 1951 ம் ஆண்டு தொடக்கம் பாடசாலை ஊழியர்களுக்கு வேதனம் வழங்க பணம் தந்ததோடமையாது இவ்வூழியர்களின் அவசியத்தையும் ஏற்றிருக்கிறது. ஆனல் பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றகாலம் தொடக்கம் பாடசாலை ஊழியர்கள் லீவு உரிமைகளை இழந்ததுடன் சேவையில் புதியவர்களாகக் கணிக்கப்பட்டு கடந்த காலச் சேவை நாட்களையும் இழக்கிறார்கள்.

இச்சபை இலங்கையிலுள்ள ஆசிரியர் அல்லாத பாடசாலை ஊழியர்கள் அனைவரையும் ஒன்றுசேர்த்து ஒரே முகமாக தங்கள் நியாயமான கோரிக்கைகளுக்காக போராடும்படி கேட்டுக்கொள்கிறது.

—

## யுவதியை எம். பி. கோர்ட்டில் ஆஜர் செய்தார்

### உரிமை கோரி பெற்றோர் வழக்கு

கொழும்பு, வியாழன்

கெஸ்பவ எம். பி. திரு. சோமவீர சந்திரசிறி கொழும்பு சுப்றீம் கோர்ட்டில் பதினெட்டு வயது யுவதி ஒருவரை ஆஜர் செய்தார். பனிப்பிட்டியைச் சேர்ந்த திருமதி டோனு ஜொஸ்லின் என்பவர் தனது புதல்வி சோமலதா மீது உரிமை கோரி கெஸ்பவ எம். பி. திரு. சோமவீரசந்திரசிறிக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தார்

சுப்றீம் கோர்ட் நீதிபதி திரு. ஜி. பி. ஏ. சில்வா கொழும்பு மாஜிஸ்டிரேட்டை இது பற்றிய முழு விசாரணை செய்து சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

விஸ்வகலா என்னும் பாடசாலையில் பயின்று வந்த வழக்காளியின் மகளை அவரிடம் ஒப்படைக்க அதன் டைரக்டரான திரு. சோமவீர சந்திரசிறி மறுத்ததாக வழக்காளி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தெரிவித்தார். எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் சோமலதா தொடர்ந்தும் படிப்பதற்கு விருப்பப்படுகிறார் என்றும் யார் மீதும் அவருக்குக் காதல் இல்லையென்றும் பல காலம் எதிரியின் பாதுகாப்பில் அவர் வளர்ந்ததாகவும் தெரிவித்தார். எதிரியான கெஸ்பவ எம். பி., சோமலதாவின் தாயார் தன்னிடம் ஒப்படைக்க கேட்டதற்கு தான் மறுப்பு எதுவும் தெரிவிக்கவில்லை என கோர்ட்டில் கூறினர்.

# குமாஸ்தாவுக்கு கத்திக் குத்து

## சாவகச்சேரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் காரியாதிகாரி காரியாலய குமாஸ்தாவான தம்பையா பரமேஸ்வரன் என்பவர் கத்திக்குத்துக் காயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காரியாலயத்திற்குச் செல்வதற்காக சாவகச்சேரி புகையிரத நிலையத்திற்குச் சென்றுகொண்டிருந்த பரமேஸ்வரன் புகையிரத நிலையத்திற்கு அணித்தாக வைத்து கத்தியால் குத்தப்பட்டாரெனத் தெரிகிறது. இச்சம்பவம் நேற்றுக்காலை 8 மணியளவில் நடைபெற்றது.

இச்சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. முதுகிலும் கையிலும் பலத்த கத்திக் குத்துக் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பரமேஸ்வரன் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

சாவகச்சேரிப் பொலிசைச் சேர்ந்த சார்ஜண்ட் வல்லாளன் தலைமையில் புலன்விசாரணை நடைபெற்று வருகிறது.

—

## பொலிஸ்தாக்குதல்பற்றி நீதிமந்திரிக்கு மகஜர்

கொடிகாமம், வியாழன்

யாழ்ப்பாணத்தில் சமீபத்தில் நடைபெற்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்மீது தாக்குதல் நடத்தியது சம்பந்தமாக விசாரணை நடத்துமாறு கோரி நீதிமந்திரிக்கு கொடிகாமம் தேன் தமிழ் மன்றம் மகஜர் ஒன்று அனுப்பிவைத்துள்ளது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



காங்கேசன் துறைப் பட்டின சபையின் புதிய தலைவராக திரு. மு. திடவீரசிங்கம் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இவர் கிராமசபையில் 9 வருடகாலமும் பட்டின சபையில் 9 வருடகாலமும் உபதலைவராகப் பதவி வகித்துவந்துள்ளார். பட்டின சபையின் சரித்திரத்திலேயே ஒரு விவசாயி தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை இதுவே முதல்தடவையாகும்.





நாளுக்கு நாள்
கடின பாவனைக்கு
நிகரற்று
விளங்குவது.

கனபோ
பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின் பாடசாலை யூனிபோம்களுக்கும் காற்சட்டை ஷேர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மங்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/T ... 8

# கொழும்பு மகாநாட்டு யோசனையை சீனா ஏற்கவில்லை?

## சீனப் பிரதமருக்கு அலிசாப்ரி அனுப்பிய தந்தி தரும் சந்தேகம்

### இந்தியாவின் இறுதிப் பதில் அடுத்த வாரம் தெரிந்துவிடும்

### பிரிவினைக் கோரிக்கை தடை மசோதா தயார்

கெய்ரோ, ஜன. 17

இந்திய-சீன எல்லைத்தகராறுக்குச் சமரசத் தீர்வுகாணுமுகமாகக் கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகளை ஏற்குமாறு சீனப் பிரதமர் சூ-என்-லாயை ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் விங்கமாண்டர் அலிசாப்ரி தந்திமூலம் கேட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆசிய-ஆபிரிக்க ஒற்றுமைக்கு உருவான பலன் கிடைப்பதற்கு கொழும்பு மகாநாட்டு யோசனைகளை ஏற்றுக்கொள்வதே சிறந்தவழி என்று அலிசாப்ரி தமது தந்தியில் தெரிவித்துள்ளார்.

### சீனா முழுவதுமாக ஏற்கவில்லை

ஐக்கிய அரபுக்குடியரசுப் பிரதமர் அலிசாப்ரிக்கு இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா மூலமாக சீனப்பிரதமர் சூ-என்-லாய் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். இந்தியப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அலிசாப்ரி புதுடில்லிக்கு வந்திருந்த சமயம் சூ-என்-லாயின் கடிதம் அவரிடம் கொடுக்கப்பட்டது. அந்தக் கடிதத்துக்குப் பதிலாகவே அலிசாப்ரி இப்பொழுது இந்தத் தந்தியைக் கெய்ரோவிலிருந்து அனுப்பியிருப்பதாகத் தெரிகிறது. 'கொழும்பு மகாநாட்டு யோசனைகளை ஏற்றுக்கொள்ளும்படி' சீனப்பிரதமருக்கு அலிசாப்ரி தந்தி அடித்துள்ளதால், கொழும்பு மகாநாட்டு யோசனைகளைச் சீனா 'முழுவதுமாக ஏற்கவில்லை' என்பது தெளிவாகிவிட்டதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### உடன்பாடான பதில் என்ன?

சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாயுடன் இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா பீக்கிங்கில் பேச்சுவார்த்தை நடத்தியபின் வெளியிட்ட கூட்டறிக்கையில் கொழும்பு மகாநாட்டு யோசனைகளுக்கு சீனா 'உடன்பாடான பதில்' தெரிவித்திருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. 'உடன்பாடான பதில்' என்பது தருணத்தில் தனது நிலையை மாற்றிக்கொண்டு நழுவிக்கொள்ளும் ஒரு தந்திரமாக இருக்கும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். கொழும்பு மகாநாட்டு யோசனைகளை முழுதாகவோ, நிபந்தனையுடனோ, நிபந்தனையில்லாமலோ சீனா ஏற்றுக்கொள்ளவில்லையென்றும், 'உடன்பாடான பதில்' என்பது 'யோசனைகளை சீனா எதிர்க்கவில்லை' என்ற அர்த்தத்தைத்தான் கொடுக்கிறதென்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். சீனாவின் இறுதியான பதில் இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் திங்கட்கிழமை இந்திய பார்லிமெண்ட் கூடி கொழும்பு மகாநாட்டு யோசனைகளை விவாதித்து அவற்றை அங்கீகரித்தாலும் அல்லது நிராகரித்தாலும் இந்தியா தனது இறுதிப் பதிலைத் தெரிவித்துவிடும்.

### அலி சாப்ரி பீக்கிங் செல்வார்?

சீனப்பிரதமர் சூ-என்-லாயின் அழைப்பை ஏற்று ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதமர் அலிசாப்ரி விரைவில் சீனாவுக்கு விஜயம்செய்யவிருப்பதாக அறியப்படுகிறது. சீனாவின் அழைப்பை ஏற்று பீக்கிங் சென்றுகொண்டிருக்கும் கானா நீதிமந்திரி திரு. ஒபோரி அட்டா கான்டன் வந்துசேர்ந்துள்ளார்.

### சோஷலிஸ்ட் தலைவர்கள் நேருவைச் சந்தித்தனர்

பிரஜாசோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் சிலர் பிரதமர் நேருவை நேற்றுச் சந்தித்துப்பேசினர். இந்திய-சீன எல்லைப் பிரச்னைக்கு சமரசத்தீர்வு காண்பதற்காக கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகள்பற்றி இவர்கள் திரு. நேருவிடம் பேசியதாகத் தெரிகிறது. புதுடில்லியில் நடைபெறும் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி மத்திய கமிட்டியின் மூன்றுவதுநாள் மகாநாடு இந்திய-சீன எல்லைப்பிரச்னை சம்பந்தமாக கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனையைப் பற்றியும் ஆராயும் எனத் தெரிகிறது.

### பிரிவினைத் தடை மசோதா

பிரிவினைக்கோரிக்கையையும், பிரிவினைபற்றிப் பேசுவதையும் தடைசெய்யும் மசோதா தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும் பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்தொடரில் இது கொண்டுவரப்படவிருப்பதாகவும் அறியப்படுகிறது. இந்திய அரசியல் சாஸனத்தில் ஒரு திருத்தமாக இந்த மசோதா தயாரிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சாஸனத்தில் உள்ள பேச்சுச் சுதந்திரத்துக்கு உத்தரவாதமளிக்கும் அம்சத்தை, பிரிவினை விஷயத்தில் இந்த மசோதா கட்டுப்படுத்துகிறது. இந்தியத் தலைவர்களின் தீவிரபரிசீலனையின்பின்னும் பெரும் தயக்கத்தின் பின்னும் இந்த மசோதாவை இந்திய சட்ட அமைச்சு தயாரித்துள்ளது. இந்த மசோதா குறிப்பாக திராவிட முன்னேற்றக்கழகத்துக்கு எதிராகவே கொண்டுவரப்படுவதாகக் கருதப்படுகிறது.

### மேதியின் பதவி நீடிப்பு

தமிழ்நாடு கவர்னராகப் பதவிவகித்து வரும் விஷ்ணுராம் மேதியின் பதவிக்காலம் இம்மாதத்துடன் முடிவடைவதாக இருந்தது. ஆனால் இன்னும் சிலகாலத்துக்கு அவரை அதே பதவியிலிருக்குமாறு ராஷ்டிரபதி கேட்டுள்ளதாக ராஷ்டிரபதிபவனிலிருந்து நேற்று வெளியான ஒரு அறிவித்தல் தெரிவிக்கிறது.

### அபிவிருத்திச்சபைக் கமிட்டி

தேசிய அபிவிருத்திச்சபையின் நிரந்தரக்கமிட்டி வெள்ளிக்கிழமை கூடுகிறது. 1963-64-ம் ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள்பற்றி ஆராய்வதற்காக கமிட்டி கூடுகிறது. பிரதமர் நேரு தலைமையில் கூடும் இக்கமிட்டிக்கூட்டத்தில் எல்லா ராஜ்ய முதன்மந்திரிகளும் கலந்துகொள்கின்றனர். பாதுகாப்புமுயற்சிகளுடனும் பொருளாதார விருத்தி முயற்சிகளும் பற்றி கமிட்டி ஆராயவிருக்கிறது.

### ஆந்திரநிதி

ஆந்திராவில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு இதுவரை ஒருகோடியே அறுபத்தைந்து லட்சம் ரூபாய் சேர்ந்துள்ளது. இதுதவிர 52,000 கிராம் தங்கமும், தங்கநகைகளும் சேர்ந்துள்ளன. எல்லையில் பணிபுரியும் போர்வீரர்களுக்கு 52 லட்சம் ரூபாய் பெறுமதியான அன்பளிப்புப்பொருள்களை பஞ்சாப் மகளிர் ஸ்தாபனம் ஒன்று வழங்கியுள்ளது.

### உணவு நிலைமை திருப்தி

நாட்டின் உணவுநிலைமை திருப்தியாக இருப்பதாக உதவி உணவுமந்திரி திரு. தாமஸ் நேற்று பங்களூரில் தெரிவித்தார். அரிசி கொள்வனவு செய்யும் பொறுப்பு அந்தந்த ராஜ்யங்களிடம் விடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். தெற்கு ராஜ்யங்களில் சீரான காலநிலை காரணமாக உணவு உற்பத்தி நான்கு ஐந்து லட்சம் மெட்ரிக்தொன் வரை அதிகரித்திருப்பதாக மந்திரி தாமஸ் தெரிவித்தார்.

## ஷோம்பேக்குமன்னிப்பு: அடௌலா வாக்குறுதி

### கடாங்கா இணைப்பு வேலை இலியோவுக்கு

லியப்போல்ட்வில்லி, ஜன. 17

கடாங்கா பிரிவினை முடிந்துவிட்டதாக ஷோம்பே அறிவித்ததைத் தொடர்ந்து ஷோம்பேக்கு காங்கோ பிரதமர் திரு. அடௌலா எழுதியுள்ள ஒரு கடிதத்தில் அவருக்கு பொது மன்னிப்பளிப்பதாக உறுதி கூறியுள்ளார்.

கடாங்காவை காங்கோவுடன் இணைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதப்பட்டுவருவதாக அறிவிக்கப்படுகிறது. காங்கோ மத்திய அரசாங்கத்தின் கீழ் கடாங்கா நிர்வாகத்தைக் கொண்டு வருவதில் இனியும் தாமதம் இருக்கமாட்டாதென்று காங்கோ பிரதமர் தெரிவித்துள்ளார்.

கடாங்கா தலைநகரான எலிஸபெத்வில்லிக்கு காங்கோவின் முன்னாள் பிரதமர் திரு. இலியோவை கடாங்கா நிர்வாக இணைப்பு அலுவல்களைக் கவனிப்பதற்கு அனுப்பப்படவிருப்பதாக திரு. அடௌலா தெரிவித்துள்ளார்.

திரு. ஷோம்பே எலிஸபெத்வில்லிக்குத் திரும்பியதும் ஐ. நா. அதிகாரிகள் அவருடன் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பார்களென்று ஐ. நா. தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் கூறினார்.

## கம்யூனிஸ்ட் நாடுகளின் பொது மகாநாடு

### யோசனையை சோவியத் பிரதமர் நிராகரித்தார்

பெர்லின், ஜன. 17

கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள கொள்கை வேறுபாடுகளை நீக்குவதற்குச் சகல கம்யூனிஸ்ட் நாடுகளையும் கொண்ட மகாநாடு ஒன்று கூட்டப்படவேண்டுமென்ற யோசனையை சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் நேற்று நிராகரித்தார். "இத்தருணத்தில் இதுபோன்றஒருமகாநாட்டைக் கூட்டுவது வேற்றுமைகளை அதிகரிக்கச் செய்யுமேயல்லாது குறைக்கச் செய்யாது" என்று திரு. குருஷ்சேவ் கூறினார்.

கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் சோவியத் பிரதமர் நேற்று உரை நிகழ்த்தினார். முதல் நாள் மகாநாட்டில் கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ஊல்பிரைட் கம்யூனிஸ்ட் சீனாவைக் கண்டித்துப் பேசியதைக் கவனித்துக்கொண்டிருந்த பின் நேற்று திரு. குருஷ்சேவ் முக்கியத்துவம் வாய்ந்த தமது உரையை நிகழ்த்தினார்.

ஸ்டாலின் வழிபாடு நீக்கப்பட்டு லெனினின் போதனைகள் மீண்டும் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் இச்சமயத்தில் கட்சி மகாநாடுகள் விசேஷ முக்கியத்துவமுடையவையென்று திரு. குருஷ்சேவ் கூறினார். 68 வயதான சோவியத் பிரதமர் தமது மூன்று லெனின் பதக்கங்களை அணிந்திருந்தார்.

சோவியத் யூனியனின் முன்னேற்றத்தையும் வெற்றிகளையும் திரு. குருஷ்சேவ் விளக்கிப் பேசினார். அணு ஆயுதங்கள்பற்றி அவர் குறிப்பிடுகையில் "நாங்கள் சுவர்க்கத்துக்குப் போகவிரும்பவில்லை. பூமியில் எங்கள் ராஜ்யங்களை சுவர்க்கமாக அமைத்துக்கொள்ளவே விரும்புகிறோம். சகல பிரச்னைகளுக்கும் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணவேண்டும்; யுத்தத்தினால் அல்ல" என்று திரு. குருஷ்சேவ் கூறினார்.

"சோவியத் யூனியன் கைத்தொழில் துறையில் வெற்றியீட்டியிருக்கலாம்; விவசாயத்தில் தோல்வி கண்டுள்ளது" என்று ஏகாதிபத்தியவாதிகள் கற்பனை செய்திருக்கிறார்கள். இது வெறும் கற்பனை; ஏமாற்றம்" என்று சோவியத் பிரதமர் கூறினார்.

—

## கென்னடி இத்தாலி செல்வார்

வாஷிங்டன், ஜன. 17

இத்தாலிக்கு விஜயம் செய்யுமாறு இத்தாலிய ஜனாதிபதி விடுத்த அழைப்பை அமெரிக்க ஜனாதிபதி கென்னடி ஏற்றுக்கொண்டுள்ளார். வாஷிங்டனுக்கு விஜயம் செய்துள்ள இத்தாலியப் பிரதமர் திரு. பான்பானி இத்தாலி ஜனாதிபதியின் அழைப்பை திரு. கென்னடியிடம் கொடுத்தார்.

திரு. கென்னடியும் திரு. பான்பானியும் நேற்று இரண்டு மணி நேரம் பேசினர். திரு. பான்பானி திரு. கென்னடியுடன் நண்பகல் உணவருந்தினார்.

## கெயிட்ஸ்கல் நிலை கவலை

லண்டன், ஜன. 17

இருதய நோய் காரணமாக லண்டன் ஆஸ்பத்திரி யொன்றில் சிகிச்சை பெற்றுவரும் பிரிட்டிஷ் தொழிற்கட்சித் தலைவர் திரு. கெயிட்ஸ்கலின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக நேற்றிரவு வெளியான வைத்திய அறிக்கை தெரிவிக்கிறது.

—

## 100 மெகாடன் குண்டு ரஷ்யா தயாரித்துள்ளது

பெர்லின், ஜன. 16

100 மெகாடடன் சக்தியுள்ள குண்டு ஒன்றை ரஷ்யா தயாரித்துள்ளது என சோவியத் பிரதமர் திரு. குருஷ்சேவ் கிழக்கு ஜெர்மன் கம்யூனிஸ்ட் மகாநாட்டில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார்.

### மணி வாக்கு

வேலைசெய்து சாப்பிடத் தக்க சரீரபலம் இருந்தும் வேலையோ, சாப்பாடோ கிடைக்காமல் கஷ்டப்படும் ஒரு மனிதன் அல்லது ஒரு பெண் இருக்கும் வரையில் நாம் சுகமாகப்படுத்து எழுந்துகொண்டு, ராஜ சாப்பாடு சாப்பிடுவதற்காக வெட்கித் தலைகுனிய வேண்டும்.

— காந்தியடிகள்


# ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு தை மீ 5 உ (18-1-63)


## பிரதமரின் சாதனை

இந்திய-சீன எல்லைத் தகராறு உலகமகா யுத்தமாக மூளாதிருக்க வேண்டுமென்ற ஆவலுடன் கொழும்பிலே ஆறு நடுநிலைமை நாடுகளும் கூடிஒரு சமரசத் திட்டத்தைஉருவாக்கியுள்ளன. அத்திட்டம் இன்னும் உத்தியோக பூர்வமாக வெளியிடப்படவில்லையானாலும்அதன் விபரங்களை எல்லாம் சீனப்பிரதமருக்கும், இந்தியப் பிரதமருக்கும் இலங்கைப் பிரதமர் திருமதி பண்[illegible]ாயக்கா எடுத்துரைத்து[illegible] இரு பெரும் ஆசிய நாடுகளுக்குமிடையே சமரசத்தை ஏற்படுத்துவதற்கு ஆறு நாடுகளும் மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்க வேண்டுமென்பதே அனைவரின் விருப்பமுமாகும்.

கொழும்பு மகாநாட்டின் யோசனைகளை சீனாவுக்கும், இந்தியாவுக்கும் எடுத்துக்கூறிய இலங்கைப் பிரதமர் தமது சமாதானத் தூது வெற்றியளிக்குமென்ற நம்பிக்கையுடன் இலங்கை திரும்பியுள்ளார்.

தகராறிலுள்ள சகல பிரச்சினைகளும் அந்நாடுகளின் கௌரவத்தைப் பாதிக்காத முறையில் சமாதானமாகத் தீர்க்கப்படவேண்டுமென்பது பாண்டுங் மகாநாட்டின் அடிப்படைக் கொள்கையாகும். கொழும்பில் நடைபெற்ற ஆறு நடுநிலைமை நாடுகள் உருவாக்கிய சமரசத் திட்டமும் பாண்டுங் மகாநாட்டின் நோக்கத்தைக் கொண்டவையாகவேயிருக்குமென [illegible] எதிர்பார்க்கலாம்.

இருநாடுகளுக்குமிடையே கொழும்பு மகாநாட்டு யோசனைகளைவிளக்கி மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதே இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் நோக்கமாகும். பெண்மணி ஒருவர் இத்தகையதொரு சீரிய பணியில் ஈடுபட்டிருப்பதை மகத்தான ஒரு சாதனையாகவே உலகம் கருதுகின்றது. பிரதமரின் இந்த நன்முயற்சி வெற்றிகிடைக்கவேண்டுமென இந்தியப் பிரதமர் நேரு தெரிவித்திருப்பதுடன் கொழும்பு மகாநாட்டுத் திட்டத்தையும் இந்தியா ஆராய்ந்தும் வருகின்றது. ஆறு நாடுகளின் சமரச யோசனை இந்தியாவுக்கும்,சீனத்துக்கும் உடன்பாடாக இருக்குமாயின் அது ஆசியநாடுகளின் நல்லுறவுக்கும் உலகசமாதானத்துக்கும் உரம் செய்வதாகும்.

— —

## இலங்கை-இந்திய உறவு

இந்திய - சீனத் தகராறு அமைதியான முறையில் தீர வேண்டுமெனத் தாம் விரும்புவதாகப் புதுடில்லியிலுள்ள இந்திய - இலங்கை நட்புறவுக் கழகம் அளித்த வரவேற்பிற் கூறிய இலங்கைப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா, இலங்கை-இந்திய நட்புறவின் அவசியத்தையும் வற்புறுத்திப் பேசியிருப்பது பெரிதும் வரவேற்கத்தக்கது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே சிக்கல்கள் பல இருப்பினும் அவை நண்பர்களுக்கிடையே நடப்பதுபோல் சமரசப் பேச்சுக்கள் மூலமும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையிலும் எப்பொழுதுமே தீர்க்கப்படுமென அவர் கூறியிருப்பது நட்புறவில் இலங்கை கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இலங்கைக்கு இந்தியா வழங்கிய மாபெரும் பரிசு புத்த மதம்எனவும், இலங்கை இதற்காகக் கடமைப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியிருப்பதுடன் இந்திய - இலங்கை உறவு மிகமிகப் பழமை வாய்ந்ததென்பதையும் நினைவூட்டியுள்ளார்.

இலங்கையின் முன்னோர்கள் அனைவரும் இந்தியாவிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்றும் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்தே இந்த நட்புறவு இருந்துவருவதாகவும் அவர் பெருமைகொள்ளுகின்றார். எனினும் இலங்கை-இந்திய உறவு இப்போது பலவகையிலும் பாதிக்கப்பட்டுவருவது வருத்தத்துக்குரியதே. வெளிநாட்டுத் தகராறுகளைச் சுமுகமாகத் தீர்த்து வைப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி உழைத்துவரும் இலங்கைப்பிரதமர், இலங்கை-இந்தியச் சிக்கல்களையும் விரைவில் தீர்த்துவைப்பார் என எதிர்பார்க்கின்றோம்.

# 'சமத்துவம் சுடர் விட்டு ஓங்குக'

## விவேகானந்தர் நூற்றுண்டு விழாச் செய்தி

### உலகுக்கு இராமகிருஷ்ண மடத் தலைவர் வேண்டுகோள்

பாரதத்தின் ஆத்மீகயோகி சுவாமி விவேகானந்தரின் நூறுவது பிறந்தநாள் அகிலமெங்கும் கொண்டாடப்படுவதையொட்டி கல்கத்தாவிலுள்ள ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி மாதவானந்தா விடுத்துள்ள செய்தி வருமாறு:-

சுவாமி விவேகானந்தர் இவ்வுலகில் மிகக் குறைந்தகாலமே வாழ்ந்தபோதிலும் அக்குறுகிய காலத்தே அவரது சாதனைகள் மகத்தானவை. கீழைத்தேசத்தையும் மேற்கு உலகத்தையும் ஒன்றாகக் கவர்ந்த ஆத்மீகசாதனைகள் பல நிறையப்பெற்றது அது.

இளைஞராயிருந்தபோதே தட்சிணேஸ்வரத்தில் தமது குருதேவரின் காலடியில் அமர்ந்து தெய்வத்தின் ஒளியை மனிதனிடத்தே கண்டு அகில சமரச ஞானத்தையும் உட்கொண்டவர் அவர். இந்தியாவில் பிறந்தபோதிலும் சுவாமி விவேகானந்தர் அகில உலகுக்கும் உரித்தானவர். இந்தியா அவர்மீது விசேட பாத்தியதை கொண்டாடியதில்லை. பொதுவாக மனிதகுலத்தின்பால் ஆண்பெண் இருபாலாரிடத்தும் உள்ள தெய்வீக இயல்பும் சமத்துவப்பான்மையும் சுடர்விட்டு ஓங்கவேண்டுமென்பது அவரது பெரும் இலட்சியமாயிருந்தது. வெறுப்பும் போராட்டமும் சூழ்ந்துள்ள உலகவாழ்வில் சாந்தி ஏற்பட அதுதான் ஒரேவழி என்று உறுதியாக நம்பினர் அவர்.

"இந்திய நாட்டை நேசிக்கிறேன். அதில் ஐயமில்லை. ஆனால் எனது நோக்கு தினமும் கனிந்துவருகிறது. இந்தியா, இங்கிலாந்து, அமெரிக்கா இதெல்லாம் என்ன? அறியாதோர் மனிதன் என்று அழைக்கும் அந்த மனுக்குல தெய்வத்தின் பணியாளர் அன்றோ நாமனைவரும். அரசியல், சமூகம், ஆத்மீகம் அத்தனை துறையிலும் நானும் எனது சகோதரனும் ஒன்று என்ற பிணைப்பு ஐக்கியம் முதன்மை பெறவேண்டும். எல்லாத்தேசங்களுக்கும் எல்லா மக்கள் இனத்துக்குமே இது ஏற்புடைத்தாகும்."

இவ்வாறு சுவாமிகளின்வாக்கியங்களையே இங்கு எடுத்துக்காட்டுவது பொருத்தமாய் அமையும். அவரது வாழ்வில் மதமும் விஞ்ஞானமும், விவேசமும் நம்பிக்கையும், பழமையும் புதுமையும், கிழக்கும் மேற்கும் ஒன்றாக இணைந்தன. அத்தகையதொருமகத்தான இணைப்பை சங்கநாதம் செய்யும் ஓர் மகாபுருஷராக அவரே விளங்கினர். மனிதகுல நாகரிகத்தின் வரலாற்றில் அவரது வாழ்வும் அதன் போதனையும் ஒருபுதிய பாதையை வகுப்பதற்குப் பெரிதும் உதவின.

விழிப்படைந்து செயலில் இறங்குமாறு அவர் தமது தேச மக்களுக்கு அறைகூவல் விடுத்தார். "செயல் செயல் செயலில் இறங்குமின்! இந்தியாவின் எதிர்காலம் அதில்தான் தங்கியிருக்கிறது" என்றார். பொறாமை, பகைமை போன்ற நம்மைச் சிறுமைப்படுத்தும் குணங்களை அறவே களைந்துவிட்டு ஒன்று சேருங்கள்—தனித்தனித தொகுப்பாகத்திரண்டு பின் அனைத்திந்திய இனமாகக் கூடுங்கள். நமது முன்னோர் வகுத்துச்சென்ற பாதை அதுதான என்று இந்திய மக்களுக்கு இதோபதேசம் செய்தார். பாரத சமுதாயம் பண்டைக்காலம் முதலாக ஈட்டிய சாதனைகளைப் பெருமையுடன் நோக்கும்படியும் தாய்நாட்டின் மகோன்னத வருங்காலத்தில் தளராத நம்பிக்கை வைக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொண்டார். எனக்கு முன்பாக இந்நாட்டில் பிறந்து வாழ்ந்த மற்ற யாரைக்காட்டிலும் நான் பெருமைப் பட்டுக்கொள்ளுகிறேன் என்றால் அது எனக்காகவல்ல எனது முன்னோர்களுக்காக. அந்த முன்னோர் பரம்பரை எனக்கு வலிமை அளித்திருக்கிறது. மண்புழுதியில்புரண்ட எனக்குமேலான [illegible]யாச்சி அளித்திருக்கிறது. நான் அடையும் இதேபெருமை உங்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும் என்பதே என் வேண்டுதல்.

எதிர்கால இந்தியா பற்றி அவர் கூறியிருப்பதாவது:-

எனது தாய்நாடு அதற்கே உரிய இராச கம்பீர நடையுடன் தனது வாழ்வைத்தானே நிர்ணயித்துக்கொள்ளும்மிடுக்குடன் அடிவைத்துச்செல்வதைக் கொண்கிறேன். எழுமின்! விழிமின்! நீண்ட இரவு சென்று மறைகிறது; அருணோதயம் நெருங்குகிறது. புதுவாழ்வின் பிரவாக அலை எழுந்து விட்டது. அதன் உக்கிரமானகொந்தளிப்பு இனிஎதற்கும்கட்டுப்பட்டுநிற்கப் போவதில்லை. அவள்-என் தாய், அன்னைபூமி இனியும்உறக்கத்தில்ஆழ்ந்திருக்கமாட்டாள் எந்த ஓர் அந்நிய சக்தியாலும் அவளுடைய வேகத்தை பிடித்துநிறுத்திவிட முடியாது. நீள்விசும்பாக ஓங்கிநின்ற ஓர் அரக்கன் அவளது காலடியில் வீழ்ந்து விட்டான். இந்திய மக்களே, உங்களிடம் உறுதியான நம்பிக்கை கொள்வீர். அல்லாது போனால்உங்களுக்கு இரட்சிப்பு என்பதே கிட்டாமல் போய்விடும். குலையாத தன்நம்பிக்கை, மாமலைபோல் எதுவரினும் அசையாத மன உறுதி, தியாகம்—இவை நவ பாரதத்திற்கு அவசியம் தேவை.

— —

## 'தியாகம் செய்வீர் தேரோ வேண்டுகோள்'

களனி, வியாழன்

"மக்களின் தியாகமின்றி எந்த நாடும் முன்னேற்றமடைய முடியாது. இலங்கையைப் பொறுத்த அளவில், இந்த நாடு இப்பொழுது பெரிய அபாயத்தில் இருக்கிறது. அபாயத்திலிருந்தும் இந்த நாட்டை மீட்பதற்கு மக்கள் தியாகம் செய்ய வேண்டும்."

வெலிகொடபொல கோவிலில் நடைபெற்ற விழாவொன்றில் வித்தியாலங்கார பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் கிரிவத்துவ ஸ்ரீ பிறக்னசார மகா நாயக்க தேரோ பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

பேராசிரியர் பன்னகிட்டி தேரோ பேசுகையில், பட்டம் பெறுவதற்காக மட்டும் மாணவர்கள் கல்வி பயிலக்கூடாதென்றும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு நல்ல அறிவைப்பெற பயிலவேண்டுமென்றும் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஆராய்ச்சித் திறன் படைத்த மாணவர்கள் இந்த நாட்டுக்கு உடனடியாகத் தேவையென்று கூறினர்.

— —

## மந்திரியைப் பேட்டி கண்டனர்

பதுளை, வியாழன்

அகில இலங்கை தபால் தந்தித் தொழிலாளர் சங்கத்தின் பதுளைக் கிளைப் பிரதிநிதிகள் நிதி அமைச்சர் திரு. பி. பி. ஜி. கலுகலலையைப் பேட்டி கண்டு தமது சில கோரிக்கைகள் பற்றி வலியுறுத்தினர்.

தமது கோரிக்கைகளுக்கு மந்திரி இணங்கியுள்ளளதாகவும், தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிடில் உடனடி நடவடிக்கையில் இறங்குவதற்கு தாங்கள் தயங்கமாட்டார்களென்றும் இச்சங்கக் காரியதரிசி பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கைஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கிராயன்கும்புர என்னுமிடத்தில் கடமையாற்றிக் கொண்டிருக்கையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட குணபண்டாவின் மரணம் பற்றி விசாரணை செய்வதற்கு இரண்டு பேர்கொண்ட குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென்பதும் மந்திரியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளில் ஒன்றாகும்.

## ஆசிரியர்களின் பொறுப்பு

ஆசிரியர்கள் வெறும் போதனை என்ற பிழைபட்ட கருத்தை விட்டு விவசாயிகளுடையதைப் போன்ற சுதந்திர வாழ்வின் பொறுப்பை ஏற்க வேண்டும். மாணவர்களுக்கும் அதில் பொறுப்புள்ள பங்களித்து அவர்களின் நாற்புறமும் கல்வியை உருவாக்க வேண்டும்; அல்லது தானே உருவாகுமாறு செய்யவேண்டும். குருவிடை வேலை என்பதற்கு குருவின் வாழ்க்கையில் பொறுப்புடன் பங்குகொள்ளுதல் என்பதே பொருள். அவ்வாறு பொறுப்புடன் பங்குகொண்டு அதில் தோன்றும் ஐயம் முதலியவைகளை ஆசிரியரைக் கேட்டுத் தெளிய வேண்டும். குருவும் தம் வாழ்க்கையின் பொறுப்பைக் கொண்டு செலுத்தியவாறே மாணவர் எழுப்பும் ஐயங்களுக்கு இயன்ற அளவு விடை கூறுதலை வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே கொண்டு விடை கூறிக்கொண்டு போகவேண்டும். இதுவே கல்வியின் சொரூபம்.

**தலைசிறந்த ஆசிரியர் அருகிருத்தலே கல்வி**

தேசீய வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டுமென்பதைத் தம் வாழ்க்கையின் மூலம் காட்டுதல் தேசியக் கல்வி ஆசிரியரது கடமை. இக் கடமையை ஆற்றிக்கொண்டே இருக்கையில் அவரது வாழ்க்கையின் நாற்புறமும் தாமே கல்வியின் கிரணங்கள் பரவும். அக் கிரணங்களின் ஒளியினால் அக்கம் பக்கத்திய சூழ்நிலை தானே உருவாகும். இத்தகைய ஆசிரியர் இருக்குமிடம் எவரது முயற்சியுமின்றி தானே கல்விக்கேந்திரமாய் ஆகிவிடும். அப்பொழுது அதனருகில் இருத்தலே கல்வி பெறுதல் ஆகும்.

மனிதன் புனிதவாழ்வு வாழ வேண்டுமென்பதை நினைவில் கொள்ள வேண்டுமென்பதை நினைவில் கொள்ள வேண்டும். கல்வியைக் கவனித்துக்கொள்வதற்கு அவ்வாழ்க்கைக்கே ஆற்றலுண்டு. அதற்கு வெறும் கல்வியில் ஆசை கொள்ளத் தேவையில்லை.

**கல்வி அளிப்பதையே தொழிலாகக் கொள்ள வேண்டாம்**

ஆசிரியத் தொழில் என்ற பிரத்தியேகமான தொழிலும் தேவையில்லை; மனித இனத்திலிருந்து வேறாய்ப் பிரித்து மாணவரென்ற ஓர் இனம் அமைக்கவும் தேவையில்லை. "என்ன செய்கிறாய்?" என்று கேட்டால், "படிக்கிறேன்" அல்லது, "பாடம் சொல்லிக் கொடுக்கிறேன்" என்ற பதில் வரத்தேவையில்லை. "விவசாயம் செய்கிறேன்" அல்லது "துணி நெய்கிறேன்" என்பது போன்ற, தொழிலாளி தரக்கூடிய அல்லது வாழ்க்கையை நேரிடையாக வாழ்வோர் தரக் கூடிய பதில் வாழ்வின் உள்ளிருந்து வர வேண்டும்.

-வினோபா அடிகள்

— —

## ரம்ஸானுக்கு நாட்டரிசி

### முஸ்லிம் ஸ்தாபனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

ரம்ஸான் நோன்பை முன்னிட்டு இம்மாதம் 24-ந் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 5-ந் திகதி வரை பங்கீட்டுக் கூப்பனுக்கு அங்கீகரிக்கப்பட்ட வியாபாரிகள் மூலமாகவும் நாட்டரிசி விநியோகிக்கப்பட வேண்டுமென யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியை யாழ்ப்பாணம் முஸ்லிம் பொதுசன ஸ்தாபனம் கோரியுள்ளது

# பருத்தித்துறை நகரசபையின் முதல் தேர்தல்

## ஜூன் மாதத்தில் நடைபெறும் அரசியல் கட்சிகள் சுறுசுறுப்பு

கரவெட்டி, புதன்

பருத்தித்துறை நகரசபையின் முதலாவது தேர்தல் வருகிற ஜூன் மாதத்தில் நடைபெறுமெனத் தெரிகிறது. இப்பொழுது 8 வட்டாரங்களைக் கொண்டுள்ள பருத்தித்துறை பட்டினசபை வருகிற ஜூலை மாதம் முதலாம் திகதி தொடக்கம் 9 வட்டாரங்களாக விஸ்தரிக்கப்பட்டு நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்படவிருக்கிறது. இதற்கான அறிவித்தல் ஸ்தலஸ்தாபன மந்திரியின் அங்கீகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

தற்போதைய பட்டினசபைத் தலைவரின் வட்டாரமான சுமார் 400 வாக்காளர்களைக் கொண்ட சுங்க வட்டாரம் 800 வாக்காளர்களைக் கொண்டதாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

ஜூன் மாதம் நடைபெறவிருக்கும் நகரசபைத் தேர்தலுக்கு இப்பொழுதிருந்தே அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போதைய தலைவருக்கு கட்சிரீதியிலும், தனிப்பட்ட கோதாவிலும் எதிர்ப்பு இருக்குமென்றும், அவர் சொந்த வட்டாரத்தைவிட்டு வேறு வட்டாரத்தில் போட்டியிட ஆதரவு தேடிவருகிறாரென்றும் நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. அவருக்கு நேரடிப்போட்டியொன்று ஏற்படுத்த ஏற்பாடாகி வருவதாகத் தெரிகிறது.

புதிய வட்டாரமாகத் தோற்றும் பிள்ளையார் கோவில் வட்டாரத்தில் பழைய தெணி வட்டாரத்தின் அர்ச் தொம்மையப்பர் கோவிலுக்குக் கிழக்குப் புறமாயுள்ள வாக்காளரும் பழைய நெல்லண்டை வட்டாரத்தின் வடக்குப் புறமாயுள்ள வாக்காளரும் பழைய கோவில் வட்டாரத்தின் வாக்காளரும் ஒருங்கு சேர்க்கப் பட்டிருக்கிறார்கள். பழைய சுங்க வட்டாரம், ஐயனார் கோவில் வட்டாரம், ஓடற்கரை வட்டாரம் ஆகியமூன்றும் இரண்டு வட்டாரங்களாகப் பிரிக்கப் பட்டு ஐயனார் கோவில் வட்டாரத்தின் ஒரு பகுதி சுங்க வட்டாரத்துடனும் மற்றைய பகுதி மருதடி வட்டாரத்துடனும் இணைக்கப்பட்டிருக்கிறது. பழைய மாதனை வட்டாரம் மிகப்பெரியதாகவிருந்து இப்பொழுது 800 வாக்காளர்களைக் கொண்டதாய் விஸ்தீரணம் குறைக்கப்பட்டுள்ளது.

புதிய 9 வட்டாரங்களும் பின்வருமாறு:-

1. தம்பசிட்டி வட்டாரம், 2. ஓடற்கரை வட்டாரம், 3. சுங்க வட்டாரம், 4. தெணி வட்டாரம், 5. பிள்ளையார் கோவில் வட்டாரம், 6. நெல்லண்டை வட்டாரம், 7. சிவன் கோவில் வட்டாரம், 8. மாதனை வட்டாரம், 9. மருதடி வட்டாரம்.

---

# சிவாஜி கணேசன் வீட்டில் சோதனை

சென்னை, ஜன.15

நடிகர் சிவாஜி கணேசன் வீட்டை இந்திய மத்திய அரசாங்க நிதியமைச்சைச் சேர்ந்த இலாகா அதிகாரிகள் சமீபத்தில் சோதனை நடத்தியதாகத் தெரிகிறது.

அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பின்மீது சென்ற வருடம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்து பின்னர் அங்கிருந்து இங்கிலாந்து, ஜெர்மனி, ஜப்பபன், மலேயா ஆகிய நாடுகளுக்கும் சிவாஜி கணேசன் சென்றுவந்தபோது அந்நிய செலாவணியில் மோசடிகள் நடைபெற்றிருப்பதான சந்தேகத்தின் மீது இந்த சோதனை நடைபெற்றதாகத் தெரிகிறது.

சிவாஜியின் வீடு, சிவாஜி பிலிம்ஸ் காரியாலயம் ஆகிய இடங்களில் சோதனையிட்ட பின் சில தஸ்தாவேஜுகளை அவர்கள் எடுத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது. மோகன் ஆர்ட்ஸ், மோகன் கிருஷ்ணன் வீடு, எம். பெருமாளுர் செட்டியின் வீடு, சித்திரா கிருஷ்ணசாமியின் வீடு ஆகிய இடங்களும் மற்றும் சில இடங்களும் சோதனையிடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

---

## வைத்திய நிபுணர்களின் புதிய கோரிக்கை

கொழும்பு, வியாழன்

1959 வருஷத்துக்கு முன்பாக முழு நேரமும் வேலைபார்ப்பதற்குச்சம்மதித்த அரசாங்க ஸ்பெஷலிஸ்டுகளான விசேட பயற்சிபெற்ற வைத்திய நிபுணர்கள் சமீபத்தில் நோயாளிகள் தனிப்பட்டமுறையில் வைத்திய ஆலோசனை பெறுவது சம்பந்தமாக அரசாங்கம் செய்திருக்கும் ஒரு தீர்மானத்துக்குப் பிற்பாடு பாதி வேலை வேலை செய்வதற்கு மனம்மாறி விருப்பத்தையும் தெரிவித்திருக்கின்றனர்.

நோயாளிகள் தனிப்பட்ட முறையில் வைத்திய ஆலோசனை பெறுவதற்கு முழுநேரம் வேலைபார்க்கும் தங்களை அனுக முடியாதவாறு அரசாங்கத்தின் சமீப தீர்மானம் தடைவிதிக்கிறதென்றும் அது தங்களுக்கு நஷ்டம் தருவதாயுள்ளதென்றும் இவர்கள் தெரிவித்துக்கொள்ளுகின்றனர். ஆனால் அதற்கு ஐந்து வருஷகால முழுநேர சேவைக்குப் பிற்பாடே இவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். 1959 வருஷத்துக்குப் பிற்பாடு சேர்ந்த ஸ்பெஷலிஸ்டுகளுக்கு அப்படி ஒரு சட்டம் விதிக்கப்பட்டிருக்கிறது. இவர்களில் இப்படி மொத்தமாக 35 பேர் உள்ளனர்.

---

## மாணவி தற்கொலை

மீரிகம, வியாழன்

அத்தனகல்லையைச் சேர்ந்த 18 வயது மாணவியான குசுமாவதி என்பவர் ஓடும் புகைபிரதத்தின் முன் குதித்துத் தற்கொலை செய்துகொண்டார். அந்த மாணவி தான் எழுதி வைத்த கடிதமொன்றில் தனது குடும்பத்திற்கு தான் பெரிய பாரமாக இருப்பதாகவும், வாழ்க்கை தனக்கு வெறுத்துவிட்டதாகவும் குறிப்பிட்டு எழுதியுள்ளார். மரண விசாரணையின்போது இக்கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

---

## பாலர்கழக ஆண்டு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அளவெட்டி வடக்கு கலர் சேவா சனசமூக நிலையத்தின் பாலர்கழக 10-வது ஆண்டு விழா அம்பிகா வாசிகசாலை மண்டபத்தில் வருகிற சனிக்கிழமை திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. சொற்பொழிவுகள், நடன நாடக நிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

---

# "மனிதனை மனிதனுக்க பிறந்த அவதார புருஷர்"

## வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் விவேகானந்தருக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், வியாழன்

"மனிதனை மனிதனுக்குவதற்கு பிறந்த ஒரு அவதார புருஷர்தான் சுவாமி விவேகானந்தர். கீழைத் தேசத்தின் பெருமையை, ஆத்மீக வலிமையை ஆங்கிலேயருக்குமட்டுமின்றி உலகத்தாருக்கும் எடுத்துக் கூறியவர் சுவாமி விவேகானந்தர்தான். உலகத்தில் ஒரு ஞான சூரியனாக அவதரித்த சுவாமி விவேகானந்தர் ஒரு அரசியல் ஞானியுமாவார்"

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் இன்று காலை நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவில் இளைப்பாறிய உதவி மாகாண அதிபர் திரு. எஸ். டி. மூர்த்தி பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. மூர்த்தி மேலும் கூறியதாவது:-

### உலகின் ஒளி

"நூறு வருடங்களுக்கு முன் உலகில் அவதரித்து உலகுக்கு ஒரு ஒளியாக விளங்கும் சுவாமி விவேகானந்தர், இலக்குமணன், அர்ச்சுனன் அவதாரமாக இப்போது விளங்குகின்றார்.

மேலைத் தேசத்தாரிடம் சென்று 'எங்களது நாட்டில் சமயத்தை நீங்கள் பரப்ப வேண்டாம், எங்களுக்கு பொருளாதார உதவி கிடைத்தால் போதும்' என்று கேட்டுக் கொண்ட சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகளையும்,போதனைகளையும் கேட்ட அவர்கள், சுவாமியை ஒரு 'ஞானச் சுடர்' என்று எண்ணினார்கள். அமெரிக்காவுக்குச் சென்று அவர் ஆற்றிய சொற்பொழிவைக் கேட்டு மெய்மறந்து பலர் சுவாமியின் சீடர்களாக மாறினர் இவர்களில் ஒரு அமெரிக்க மாதுவும் சுவாமியின் சிஷ்யையானார். சுவாமி விவேகானந்தருடன் ஒன்றாகப் பழகி, அவருடைய அறிவுரைகளையும், போதனைகளையும் நன்கு மனதிற்கொண்ட அந்த அமெரிக்க மாது 'நான் கண்ட குரு' என்ற நூலில் சுவாமியைப் பற்றிய தமது கருத்துக்களை விளக்கமாக எழுதியுள்ளார். சுவாமி விவேகானந்தரைப்பற்றிய ஆங்கில, தமிழ் நூல்கள் உலகின் பல பகுதிகளிலும் பிரசுரமாகின. இப்பொழுதும் பிரசுரமாக்கப்பட்டுவருகின்றன.

### பாரதியும் விவேகானந்தரும்

பாட்டுக்கொரு புலவன் சுப்பிரமணிய பாரதிக்கும் சுவாமி விவேகானந்தருக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கிறது. பாரதி ஒரு உண்மையான புலவன். தீர்க்கதரிசி. ஆனால் பாரதி எங்கிருந்து, எப்படி இந்த அற்புதக் கருத்துக்களையும் ஞானத்தையும் பெற்றார் என்பது பலருக்குத் தெரியாது. சுவாமி விவேகானந்தரைப் பின்பற்றித்தான் அவைகளைப் பாரதி பெற்றுக்கொண்டார் என்றால் அது மிகையாகாது.

எங்களிடம்மன உறுதி வேண்டும், கோழைகளாக நாம் வாழக் கூடாது, தெய்வீக வாழ்வு வாழவேண்டும் என்று கூறிய சுவாமி விவேகானந்தரை நாங்கள் பின்பற்றவேண்டும்: சுவாமி விவேகானந்தரை நாம் பின்பற்றுவதன்மூலம் எங்களிடத்திலுள்ள தெய்வீகத் தன்மை தானகவே வளரும்.

### மனிதர், மனிதராக வாழவேண்டும்

அழகு, அறிவு, ஆற்றல், சங்கீததன்மை, பணிவு ஆகியவற்றைக் கொண்ட ஓர் ஆண் மகனாக உலகில் அவர் அவதரித்தார். மனிதர் மனிதர்களாக வாழவேண்டும். மனிதர்கள் கடவுளின் குழந்தைகள், கடவுளுக்குப் பயந்து நாங்கள் நடக்வேண்டுமென்று போதித்துள்ள சுவாமி விவேகானந்தரை நாம் பின்பற்றுவதின் மூலம் நமக்கு கடவுள் பக்தி உண்டாவதுடன் நம்மை நாமொரு மனிதனாக ஆக்கிக் கொள்ளவும் வழிபிறக்கிறது."

### ஆசியாவில் விழிப்புணர்ச்சி

வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் தனது தலைமையுரையில் அரசியலில் ஏற்பட்ட மாறுதல்களினால் ஆசியாவில் வீழ்ச்சி ஏற்பட்டதென்றும் பின்னர் சுவாமி விவேகானந்தர், ஆசியாவிலே விழிப்புணர்ச்சியை உண்டாக்கினர் என்றும் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், உலகின் சரித்திர ஏடுகளில் நெப்போலியனதும் ஸ்டாலினதும் வீரவாழ்க்கை போதிய இடம் பெற்றிருக்கிறதென்றும் ஆனால் உலகுக்கு ஒரு ஒளிக்கீற்றாகத் தோன்றிய சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை மேல் நாட்டுச் சரித்திரத்தில் போதிய இடம் பெறவில்லையென்றும் கூறினா.

அவர் மேலும் பேசியதாவது:- "ரஷ்ய ஜப்பான் யுத்தத்தை, சரித்திரம் பெரிதாகக் காட்டுகிறது. ஆனால் ஆசிய மக்களிடையே சுவாமி விவேகானந்தர் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார். இதை பலர் அறியமாட்டார்கள்.

### ரஷ்யாவில்....

இராமகிருஷ்ண சங்கத்தின் கிளைகள் இப்பொழுது உலகம் பூராவுமிருக்கிறது. சோவியத் ரஷ்யாவில்கூட சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா இப்பொழுது கொண்டாடப்படுகிறதென்றால் அவரின் புகழ் உலகின் எந்தெந்தப் பகுதிகளில் பரவியிருக்கிறதென்பதை நன்கு காணக்கூடியதாகவிருக்கிறது. சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழா, அங்கு கொண்டாடப்படுவதுடன்மட்டுமின்றி, சுவாமியைப் பற்றிய அரிய நூல்களையும் வெளியிட சோவியத் ரஷ்யா முடிவு செய்திருக்கிறதாம்.

### அழியாச் செல்வம்

சுவாமி விவேகானந்தரின் நூறாவது ஆண்டு விழா இன்று ஆரம்பமாகி ஒரு வருட காலத்திற்குக் கொண்டாடப்பட்டாலும், அவரின் போதனைகளும் அறிவுரைகளும், அழியாத செல்வங்களாக உலகில் என்றும் நிலைத்து நிற்கும்."

### வாழ்வளித்த விவேகானந்தர்

இறுதியில் சொற்பொழிவாற்றிய கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலை தலைமையாசிரியர் திரு. ஆர். கந்தையா பேசுகையில், மனிதனுக்கு வாழ்வளிக்க சுவாமி விவேகானந்தர் உலகில் தோன்றினர் என்றும் அவர் வாழ்ந்த 39 வருட காலத்திற்குள் எமது கலாச்சாரத்தையும், பண்பையும் உலகத்தார் வியக்கும் வண்ணம் எடுத்து விளக்கினரென்றும் இந்து மதத்தை உலக மதமாக்கி எமக்கும் வாழ்வளித்தார் என்றும் கூறினர்.

### இளைஞருக்கு வேண்டுகோள்

அவர் தொடர்ந்து பேசுகையில், யாரை நாம் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் இளைஞர்கள் மனதில் உதிக்குமானல், இளைஞர்கள் பயமின்றி, துணிவாக சுவாமி விவேகானந்தரைப் பின்பற்றலாமென்று கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: "அமெரிக்காவில் நடைபெற்ற உலக சமய சபைக் கூட்டத்தில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய போதனைகள் இளைஞர்களுக்கு இன்றும் வழிகாட்டுவதாக அமைந்திருக்கிறது.

தனது மெய்யான குருவைப் பின் பற்றி, உண்மையான வழியில் நடந்து ஆசியாவில் பிறந்தவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக சுவாமி விவேகானந்தர் விளங்குகின்றார். சுவாமியைப்பற்றிக் கூறத்தொடங்கினல் அது முடியாத எல்லையிலாததொன்றாகிவிடும்.

### சுதந்திரம் எப்படிக் கிடைத்தது

இந்தியா, இலங்கை மற்றும் பல நாடுகள் இன்று சுதந்திரம் பெற்றுள்ளன ஆனால் அன்று சுவாமி விவேகானந்தரில்லாதிருந்தால் இந்தியா சுதந்திரம் பெற்றிருக்காது!

இந்தியாவுக்கும் சீனவுக்கும் சண்டை இருப்பது யாவரும் அறிந்த விஷயம். ஆனல் சுவாமி விவேகானந்தரின் கொள்கைகளை இந்தியா பின்பற்றியிருந்தால் சீனர் எப்பொழுதோ விரட்டப்பட்டிருப்பர். விவேகானந்தரைப் பின்பற்றாத காரணத்தினால் தான் பாரத-சீன சண்டை தொடர்ந்து நிற்கிறது."

பூசையுடன் ஆரம்பமான சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவில், கல்லூரி மாணவர்களின் பஜனையும் இடம்பெற்றது.

---

## மருந்துகளுக்கு தட்டுப்பாடு!

கொழும்பு, வியாழன்

கண்நோய்களுக்கும் இருதய வியாதிகளுக்கும் தேவையான மருந்துகளுக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதை ஏற்றுமதி இறக்குமதியாளர் சங்கத் தலைவரான ஒலிவர் பெரேரா சுகாதார அமைச்சர் செனட்டர் ஏ. பி. ஜயசூரியாவுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

முக்கியமானதும் கைவசமிருக்க வேண்டியதும் என்று வகைப்படுத்தப்பட்ட இவ்விரண்டு மருந்துகளும் பொது விற்பனை நிலையங்களிலோ அல்லது அரசினர் வைத்திய நிலையங்களிலோ எங்கேயும் கிடைப்பதாயில்லை. பொதுவாக மருந்துகளுக்கு 'கோட்டா' அளிக்கப்படும் கடைசித் திகதி ஜனவரி இறுதிக்குப்பின் போடப்பட்டிருப்பதும் இச்சமயம் சுட்டிக் காட்டப்படுகிறது. இதற்குப் பின், மருந்துகளை அனுப்புமாறு 'ஓடர்' அனுப்பி மருந்துகள் இங்குவந்து சேர எப்படியும் ஆறு மாத காலமாகுமென்றும் ஜூலை மாதம் நடுப்பகுதியில் தான் மருந்துகள் நம் கைக்கு வந்து சேருமென்றும் திரு. பெரேரா கணக்குப் போட்டுக் காட்டுகிறார். அதுவரை அரசினர் ஆஸ்பத்திரிகளும் இம் மருந்துகள் இல்லாமல் காத்திருக்க வேண்டியதுதான் என்றும் அவர் கூறினர்.

---

## ஜி. ஸி. ஈ. பரீட்சை வினத் தாள்கள்

### வித்தியாபகுதியார் சந்தேகம்

கொழும்பு, வியாழன்

1962-ம் வருட டிசம்பரில் நடைபெற்றஜி.ஸி.ஈ. சோதனைக்குரிய வினத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாக மாணவருக்குக் கிடைத்திருக்கக்கூடிய சந்தேக சாத்தியம் இருப்பது பற்றி பரீட்சைப் பகுதியார் குறித்த பரீட்சையின் வினத் தாள்களை திருத்தும் வேலையிலுள்ள பரீட்சை அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். கணிதம், பிராணிநூல், தாவரம், பௌத்தம் ஆகிய பாடங்களை அவர்கள் குறிப்பிட்டு இப்பாடங்களின் வினத் தாள்களை தனிப்படியான கவனத்துடன் திருத்துமாறு பரீட்சை அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனா.

# கோட்டம் வரவு குறித்து பரபரப்பு

## அமெரிக்க தூதர் வில்லிஸ் ஸ்ரீமாவோவை சந்திப்பார்

கொழும்பு, வியாழன்
இலங்கையில் அமெரிக்க தூதராக இருந்துவரும் மிஸ் பிரான்சிஸ் வில்லிஸ் இவ்வாரம் முதலமைச்சர் ஸ்ரீமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு செலுத்துவது பற்றியும், இலங்கைக்கு அமெரிக்க உதவியை நிறுத்திவிடும் இராசாங்க காரியாலயத்தின் எச்சரிக்கை பற்றியும் விவாதிப்பாரெனத் தெரிகிறது. இது சம்பந்தமாக நிதி அமைச்சரும், உணவு, வர்த்தக, தொழில் அமைச்சரும் முதல் அமைச்சரை நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளனர். எண்ணெய்க் கம்பெனிகளிடமிருந்து நஷ்டஈடுக் கோரிக்கைகள் எதுவும் தங்களுக்குக் கிடைக்கவில்லை என வர்த்தக தொழில் அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்ன முதலமைச்சரிடம் கூறினரென மேலும் அறியப்படுகிறது.

இப்படியான நிலைமையில் அமெரிக்க இராசாங்க காரியாலயத்திலிருந்து ஹோவாட் கோட்டம் என்பவர் இலங்கை வந்திருப்பதைக் குறிப்பிட்டு பத்திரிகை நிருபர்கள் மிஸ் பிரான்சிஸ் வில்லிஸிடம் வினவியபோது அவர் ஒரு யாத்திரீகராக வந்திருக்கிறரே அல்லாமல் அதற்கு வேறு நோக்கங்கள் இருக்கவில்லையென்றும் இப்பகுதி முழுமைக்கும் ஒரு கடவை பிரயாணம் செய்ய வேண்டுமென நீண்ட நாளாகவே அவர் எண்ணியிருந்தாரென்றும் வில்லிஸ் கூறினர். அமெரிக்க இராசாங்கம் எண்ணெய்ப் பிரச்சினை சம்பந்தமாக இயல்பாக அரசாங்கத்துடன் இன்னமும் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பதால் இது குறித்து தாம் ஏதும் அபிப்பிராயம் சொல்வதற்கில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாத்திரிகர் கோட்டம் வர்த்தக அமைச்சர் திரு. இலங்கரத்னவை அவரது உத்தியோகக் காரியாலயத்தில் நேற்றுச் சந்தித்துப் பேசினர். அப்பொழுது நிரந்தரக காரியதரிசி திரு. ஆழ்வாப்பிள்ளையும் அங்கு பிரசன்னமாயிருந்தார். கோட்டம் நீதியமைச்சரையும் சந்தித்துப்பேசியிருக்கிறர். முதலமைச்சரை இன்று சந்தித்துப் பேசுவார்.

நேற்றுக்காலை அமைச்சர்கள் கூடிப் பேசியபோது எண்ணெய்க் கம்பெனி நஷ்டஈடு பற்றியும் ஆலோசித்தார்களென்று தெரிகிறது.

# கிராம சேவையாளர் சோதனை பற்றி புகார்

## மனுக்களை ஆராய அமைச்சர் ஆணை

கொழும்பு, வியாழன்
அரசாங்க பொதுச் சேவைக் கமிஷன் சமீபத்தில் அறிவித்துள்ள கிராம சேவகர் நியமனம் பற்றி அதன் தொடர்பாக உள்ள எல்லா விண்ணப்ப மனுக்களையும் மற்றும் காகித, பத்திர தொகுப்புகளையும் பரிசோதனை செய்யுமாறு உள்நாட்டு கலாசார அமைச்சர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா அமைச்சின் உத்தியோகத்தருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கிராம சேவகர் சோதனைக்குத் தோற்றாத பலர் நியமனம் பெற்றிருக்கிறர்கள் என்ற பலத்த புகாரின் பேரில் அமைச்சர் இந்நடவடிக்கை எடுக்க முனைந்ததாகத் தெரிகிறது. அமைச்சர்கள், எம். பி.க்கள் பதவிக்காலம் காலாவதியாகும் கிராமாதிகாரிகள் என்போரிடமிருந்து இத்தகைய குற்றச்சாட்டும் புகாரும் கிடைத்துள்ளன. இன்னும் வேறு பல ஒழுங்கீனங்கள் பற்றி கடிதங்களும் அறிவித்தல்களும் அனுப்பப்பட்டிருக்கின்றன.

அமைச்சரின் உத்தரவுப் பிரகாரம் அவரது இலாகா உத்தியோகத்தர்கள் கிராம சேவகர் சோதனையில் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கப்பட்ட அத்தனை மனுக்களையும் இப்பொழுது ஒவ்வொன்றாக நுணுகி ஆராய்ந்து வருகின்றனர்.

## நீச்சல்போட்டி முடிவுகள்

கரவெட்டி, வியாழன்
கரவெட்டி கிழக்கு வளர்மதி சனசமூக நிலையம், தொண்டமனாற்றுத் தொடுவாயில் இணைந்துள்ள கல்லோடைக் கடலில் நீச்சல்போட்டி ஒன்றினை நடத்தியது.

நீரோட்டத்தின் போக்குக்கு எதிர்த்திசையான இப்போட்டியை திரு. பொ. தம்பிமுத்து ஆரம்பித்து வைத்தார். போட்டியில் முதலிடத்தை வி. பொன்னம்பலமும் (14 வயது), இரண்டாமிடத்தை திரு. எஸ். செல்லத்தம்பியும் (26 வயது), மூன்றாமிடத்தை திரு. வி கந்தப்புவும் (22 வயது) சுவீகரித்தனர்.

பரிசில்களை ஆசிரியர் திரு. எம். செல்லத்தம்பி வழங்கினர்.

---

## பெற்றோரின் முறையீடு

மாத்தளை, வியாழன்
மாத்தளைப் பகுதியில் உள்ள பல பாடசாலைகளில் இடவசதியின்மை காரணமாக இருநேர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாலர் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு பிள்ளைகளுக்குக் கூட மாலைநேர வகுப்புகள் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதனல் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உணவும், பாய்களும் கொண்டு செல்கின்றனர். கீழ் வகுப்புப் பிள்ளைகளுக்கு இவ்விதம் மாலைநேர வகுப்புகள் நடத்துவது புத்திசாலித்தனமானதல்லவென்று இவர்கள் கல்விப் பகுதிக்கு முறையிட்டுள்ளனர்.

---

## விஞ்ஞானகூடம் அமைக்க முயற்சி

சங்கானை, புதன்
'சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையின் வளர்ச்சிக்கு மலாயா மக்கள் உதவிய நிதியை அரசாங்கத்திடம் கொடுத்து, அரசாங்கத்தின் உதவியுடன் ஒரு விஞ்ஞான கூடத்தை அமைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. மலாயா வாழ் சங்கானை மக்கள் சிவப்பிரகாச வித்தியாசாலைக்கு பல விதத்தில் உதவியிருக்கிறர்கள்' என்று சங்கானை விஞ்ஞான கழகக் கூட்டத்தில் தலைவர் திரு. கா. செல்வராஜன் பேசுகையில் கூறினர்.

திரு. நாகநாதன், திரு. ச. கந்தசாமி, திரு. க. திருச்சிற்றம்பலம் ஆகியோரும் பேசினர்.

# செய்தித் திரட்டு

## அதிபர்கள் உருவப் படம்

ஊர்காவற்றுறை, புதன்
வேலணை அரசினர் மத்திய கல்லூரியின் முன்னள் அதிபர்களான திரு. ஏ. கே. கந்தையா, திரு. வி. தம்பு ஆகிய இருவரினதும் உருவப் படங்களைக் கல்லூரி மண்டபத்தில் திறந்து வைப்பதற்கு மேற்படி கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

∴ ∴ ∴

## கனவான் ஒப்பந்தம்

ஊர்காவற்றுறை, புதன்
ஊர்காவற்றுறை பட்டின சபைத் தலைவர் தெரிவு சம்பந்தமாகச் சென்ற வருடம் செய்யப்பட்ட 'கனவான் ஒப்பந்தம்' அமுல் நடத்தப்படும் எனத் தெரியவருகிறது. சென்ற வருடத் தலைவர் திரு. பி. இம்மனுவலுக்குப்பின் இவ்வருடத் தலைவராக திரு. சிதம்பரப்பிள்ளை ஒப்பந்தத்தின் பிரகாரம் தெரிவு செய்யப்படவேண்டியவர். தற்போதைய சபைத் தலைவர் திரு. இம்மனுவல் தமது தலைவர் பதவியை ராஜினமாச் செய்துவிட்டார்,

∴ ∴ ∴

## விளையாட்டுக் கழகம்

ஊர்காவற்றுறை, புதன்
ஊர்காவற்றுறை றேஞ்சேஸ் விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் நடப்பு வருடத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்:- திரு. இரத்தினராசா. உப தலைவர்:- திரு. வெஸ்லி டானியல் காரியதரிசி:- திரு. ம. ப. அ. பொஞ்சின். உப காரியதரிசி:- திரு. சபேசன். தனதிகாரி:- திரு சேவியர்.

∴ ∴ ∴

## திருவெம்பாவை

நல்லூர், புதன்
நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலில் திரு. வ. செல்லையா முகாமையில் தினமும் காலையும் மாலையும் திருவெம்பாவைப் பூசையும், ஆராதனையும் நடைபெற்றன. திருவெம்பாவைக் காலத்தில் தினமும் பி. ப. 5 மணி முதல் திருவாதவூரடிகள் புராண பாராயணம் திரு. எஸ். தம்பி ஐயாக் குருக்கள், திரு எஸ். குருநாதர், திரு. ஐ. அருணசலம் ஆகியோரின் விளக்கவுரையுடன் நடைபெற்றது. அதிகாலையில் நல்லூர் தேவஸ்தான வித்துவான் திரு. மணி பகவதரின் சீடனன திரு. எம். கணேசசுந்தரம், திரு. செ. காங்கேயன் தலைமையில் திருவெம்பாவை பஜனைக் கோஷ்டி ஊர்வல பஜனைகள் நடத்தியது.

∴ ∴ ∴

## விளையாட்டுக் கழகம்

கம்பர்மலை, வியாழன்
கம்பர் 'யங்கம்பன்ஸ்' விளையாட்டுக் கழக புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: ஆர். சோமசுந்தரம், எஸ். நாகமுத்து. தலைவர்கள்: எம். வடிவேலு, ஏ. சுந்தரம். செயலாளர்கள்: வி. சிவகுருநாதன், எஸ். சிவநேசம். பொருளாளர்: கே. சடாட்சரம், உதவி பொருளாளர்: வி. சிவலிங்கம். கணக்குப் பரிசோதகர்: ஆர். ஜெயகுணரத்தினம்.

∴ ∴ ∴

## வாசிகசாலை நிர்வாகிகள்

வேலணை, வியாழன்
நாரந்தனை-சரவணை ஸ்ரீ முருகன் வாசிகசாலையின் வருடாந்தப்பொதுக் கூட்டம் தமிழர் திருநாள் அன்று நடைபெற்றது. கடந்த ஆண்டு நிலையத்தின் செயலாளராகவும், பொருளாளராகவும் பணியாற்றிய திருவாளர்கள் மு. மாணிக்கவாசகர், நா. தவச்செல்வம் ஆகியோருக்கு கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வே இராசையா, உப தலைவர்: திரு. நா. மதியாபரணம், செயலாளர்: திரு. க. பேரின்பதாசன், துணைச் செயலாளர்: திரு. க. சிவயோகநாதன்பொருளாளர்: திரு. க. குமாரசாமி, துணைப் பொருளாளர்: திரு. ந. சிவானந்தன்விளையாட்டுக்குழுத்தலைவர்: க. சிவகுமார், வழிபாட்டுக் குழுத்தலைவர்: க. சர்வானந்தன்.

∴ ∴ ∴

## தலைமையாசிரியர் நியமனம்

ஓமந்தை, வியாழன்
ஓமந்தையிலுள்ள வேடமகிழங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் தலைமையாசிரியராக மருதோடை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் கடமையாற்றிய திருமதி ம. சிவப்பிரகாசம் நியமிக்கப்பட்டுள்ளார்.

∴ ∴ ∴

## பிரியாவிடை

யாழ்ப்பாணம், வியாழன்
வதனியா மூன்று முறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் உதவி ஆசிரியைகளாகக் கடமையாற்றிய செல்வி சிவபாக்கியம், செல்வி அபயாம்பிகை அம்மா ஆகியோர் ஆசிரிய கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டதையொட்டி பாடசாலைத் தலைமையாசிரியர் திரு. இரத்தினசிங்கம் தலைமையில் பிரியாவிடை வைபவமொன்று நடைபெற்றது.

∴ ∴ ∴

## ஆறு மாதம் சிறை

பருத்தித்துறை, வியாழன்
கோர்ட்டாரின் தீர்ப்புப்படி பராமரிப்புப் பணம் கட்டத் தவறியதன் பேரில் மேரிபுஷ்பம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கொன்றில், பருத்தித்துறை நீதிபதி எதிரியான கரவெட்டியைச் சேர்ந்த டி. புவிராசசிங்கம் என்பவருக்கு ஆறு மாதச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

∴ ∴ ∴

## றேடியோ திருடினர்

பருத்தித்துறை, வியாழன்
மருதங்கேணியைச் சேர்ந்த சின்னத்தம்பி இலட்சுமி என்பவருக்குச் சொந்தமான பிலிப்ஸ் றேடியோ ஒன்றை திருடிய குற்றத்துக்காக சாவகச்சேரியைச் சேர்ந்த குஞ்சன் தம்புவுக்கு நீதிபதி ஏ. வைத்திலிங்கம் 9 மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

∴ ∴ ∴

## வருடாந்த மகாநாடு

பருத்தித்துறை, வியாழன்
வடமராட்சி தமிழ் ஆசிரியர் சங்க வருடாந்த மகாநாடு எதிர்வரும் சனிக்கிழமை வட மத்திய ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறும்.

# 'அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்குக

## மக்கள் வங்கியின் இலாபத்தை நல்ல முறையில் பயன்படுத்தலாம்'

### —மக்கள் வங்கி டைரக்டர்

கம்பஹா, வியாழன்
"பணத்தைச் சேகரித்து வைப்பதில் எவ்வித பயனுமில்லை. எனவே அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்து, அவற்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதுடன், மக்கள் வங்கி மூலம் கிடைக்கும் இலாபத்தை இவ்வித அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன் படுத்த வேண்டும்".

இவ்வாறு மக்கள் வங்கியின் டைரக்டர் திரு. வின்சன்ட் சுபசிங்கா இங்கு கூட்டுறவு ஆஸ்பத்திரி ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:-

மக்கள் வங்கியின் நிதி நிலைமை திருப்திகரமான நிலையிலிருந்தபோதிலும் அதனல் கிடைக்கும் இலாபத்தை நல்ல முறையில் பயன்படுத்த முடியவில்லை. அந்த இலாபத்தை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கான அபிவிருத்தித் திட்டம் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை. கூடிய விரைவில் நல்ல அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்துத் தரும்படி கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவைக் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் நாளாந்த தேவைகள் எல்லாவற்றிற்கும் அரசாங்கத்தையே மக்கள் நம்பியிருப்பது வருத்தத்திற்குரியதாகும். அரசாங்கம் தன்னல் இயன்ற அளவில் மக்களுக்குச் சேவை செய்ய முயற்சித்தாலும் சில வேளைகளில் சிலர் அதையிட்டு திருப்திப்படுவதில்லை. வரிப்பணத்தைக் கொண்டு எதை எதைச் செய்யலாம் என்பது பற்றி மக்கள் உணரவேண்டும். மக்கள் தங்கள் சகல தேவைகளுக்கும் அரசாங்கத்தை எதிர்பார்க்காமல் தாங்களே முயற்சி செய்ய வேண்டும்.

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவும் பேசினர்.

---

## சம்பள உயர்வு உண்டு

### இ. போ. ச. சாரதிகளுக்கு

கொழும்பு, வியாழன்
1958-ம் ஆண்டு இ. போ. ச. வைச் சேர்ந்த பஸ்சாரதிகளுக்கு இருந்த ஆரம்ப சம்பளத்தை விட இப்பொழுதுள்ள ஆரம்பச் சம்பளம் அதிகமானதென இ. போ. ச. வைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1958-ம் ஆண்டில் ஒரு பஸ் சாரதிக்கு ஆரம்ப சம்பளம் மாதம் 165 ரூபாவாக இருந்ததென்றும், இப்பொழுது அவர்களுக்கான மாத ஆரம்ப சம்பளம் 219 ரூபா 20 சதமெனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். 1958-ம் ஆண்டுச் சம்பளத்துடன் 5 ரூபா வீதம் பத்துவருடங்களுக்கானசம்பள உயர்வைக் கொண்டிருப்பதே அவர்களுக்கு வழங்கப்படும் தற்போதைய சம்பளம் எனவும் அந்த அதிகாரி சுட்டிக் காட்டினர். எனவே 1958-ம் ஆண்டில் சம்பள சபையினர் வருத்த சம்பளத்துடன் சேர்ந்த சம்பள உயர்வுடனேயே இவர்களுக்கு இப்பொழுது சம்பளம வழங்கப்படுவதாக அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

---

## காரியாதிகாரி கந்தோர் சேதமடைந்தது

மலிம்பொட, வியாழன்
மலிம்பொடப் பகுதிக் காரியாதிகாரி கந்தோர் பலத்த மழையின் பின் ஏற்பட்ட நில அதிர்ச்சியால் சேதத்திற்குள்ளாகியது. இரு அறைகள் முற்றிலும் சேதமடைந்து விட்டன. நில அதிர்ச்சி காரணமாக ஐம்பது அடி நீளமுள்ள பலா மரம் ஒன்று கட்டடத்தின் மேல் விழுந்து சேதத்தை உண்டாக்கியது. இவ் விபத்து இரவில் நடந்தமையால் எவரும் காயத்துக்குள்ளாகவில்லை. காரியாதிகாரியின் கந்தோர் இப்பொழுது தனிப்பட்ட கட்டடம் ஒன்றுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. சேதமடைந்த இடத்திலிருந்த உபகரணங்களும் இக் கட்டடத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

# 2000 பேர் தோற்றினர் 91 ஆசிரியர்களே தெரிவு

## தமிழ் தராதரப் பத்திர ஆசிரியர் சங்கம் கவலை

யாழ்ப்பாணம், வியாழன்
1962-ம் ஆண்டு தமிழாசிரியர் கலாசாலைப் பிரவேச பரீட்சைக்கு 2000-க்கு அதிகமான தமிழாசிரியர்கள் தோற்றியும், இவ்வாண்டு வட இலங்கையிலுள்ள நான்கு தமிழாசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கும் 91 தமிழாசிரியர்களே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழ் தராதரப் பத்திர ஆசிரியர் சங்கம் தெரிவித்திருப்பதாவது:-

பரீட்சை ஆரம்பத்தில், இவ்வளவு தொகைதான் எடுக்கப்படுமென வித்தியாபகுதி அறிவித்திருந்தால், அநேக தமிழ் ஆசிரியர்கள் இப்பரீட்சைக்கு தோற்றியிருக்கமாட்டார்கள். தமிழாசிரிய கலாசாலைகளை மூடுவதற்கு எதிர்ப்புக்காட்டும் எங்களது எம். பி. க்களும் பொது ஸ்தாபனங்களும் இப்படியான குறைந்த தெரிவைப் பற்றி அறியாதிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதொன்றாகும். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையை மூடாது மற்றும் எந்தக் கலாசாலையிலும் தற்பொழுது இருக்கும் இரண்டாம் வருட மாணவர்களை இடமாற்றம் செய்யாதிருக்கவும் 1963-ம் வருடப் பயிற்சிக்கு வடபகுதி ஆசிரியபயிற்சிக் கலாசாலைகளுக்கு 150 ஆசிரிய மாணவர்களுக்குக் குறையாது திறமை அடிப்படையில் தெரியவும் இது சம்பந்தமாக எல்லா ஸ்தாபனங்களையும் பாராளுமன்ற உறுப்பினர்களையும் ஏற்ற நடவடிக்கையெடுக்குமாறும் இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

## மற்றொரு 'பிளைவூட்' உற்பத்திச்சாலை?

கொழும்பு, வியாழன்
மற்றொரு 'பிளைவூட்' உற்பத்திச்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறது. வன இலாகா இதற்கான திட்டத்தை வகுத்துள்ளதாகத் தெரியவருகிறது. பிரயோசனமற்றுப் போகும் பெருந் தொகையான மரங்களை கொண்டு 'பிளைவூட்' தயாரிக்கலாம் என வன இலாகா கருதுகிறது.

ஜிந்தோட்டவிலுள்ள தற்போதைய 'பிளைவூட்' உற்பத்திச்சாலையை விஸ்தரிப்பதற்கான வசதிகள் இருக்கிறதா என்பது பற்றி பிளைவூட் கார்ப்பரேஷன் பரிசீலனை செய்து வருகின்றது.

## புதிய தேர்தல் முன்னணி

### மகாஜன பெரமுனை உருவாக்குகிறது

கொழும்பு, வியாழன்
அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு "பஞ்ச மகா முன்னணி" ஒன்றைத் தோற்றுவிப்பது பற்றி மகாசன எக்சத் பெரமுனை லங்கா சமசமாஜக் கட்சியையும் பொதுவுடைமைக் கட்சியையும் ஜாதிக விமுக்தி பெரமுனையையும் கலந்துகொண்டிருக்கிறது. இதுபற்றி எம். ஈ. பி. கடிதம் எழுதியுள்ளது.

எம். ஈ. பி. உருவாக்கியுள்ள இந்த ஐம்பெரும் முன்னணி புத்தகுருமார்களையும் பள்ளிக்கூட ஆசிரியர்களையும் ஆயுர்வேத வைத்தியர்களையும் குடியானவர்களையும் தொழிலாளர்களையும் அங்கத்தவர்களாகச் சேர்த்துக்கொள்ளும்,

மேலே குறிப்பிட்டுள்ள மூன்று அரசியல் கட்சிகளோடு சுதந்திரக்கட்சியின் முற்போக்கு சக்திகளும் வரவேற்கப் படுவார்களென்றும் எம். ஈ. பி. கூறியுள்ளது.

# வதிரி 'டயமன்ட்ஸ்' சாம்பியன்

வதிரி, வியாழன்
1962-ம் ஆண்டு சித்திராபூரணை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பதினைந்து கோஷ்டிகளைத் தோற்கடித்து வெற்றிக் கேடயத்தையும் ஓர் வெள்ளிக் கிண்ணத்தையும் சுவீகரித்த வதிரி டயமன்ட்ஸ் கோஷ்டியினர் அவ்வாண்டு இறுதியில் வல்வெட்டித்துறையில் நடைபெற்றமற்றோர் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஆறு பலம்வாய்ந்த கோஷ்டிகளை தோற்கடித்து சாம்பியனாகி இன்னுமோர் விலையுயர்ந்த வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக்கொண்டனர்.

வல்வெட்டித்துறையில் நடைபெற்ற சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை நெற்கொழு மைதானத்தில் வதிரி டையமன்ட்ஸ் கோஷ்டிக்கும் உடுப்பிட்டி யூனியன் கோஷ்டிக்கும் இடையில் நடைபெற்றது. போட்டி ஆரம்பத்தில் யூனியன் கோஷ்டியினர் ஒரு கோலைப் போட்டனர். அதைத் தொடர்ந்து இடைவேளைக்கு முன் டயமன்ட்ஸ்கோஷ்டியின் முன்னணி வீரன் க. இராசதுரை ஒரு கோலைப்போட்டு எண்ணிக்கையைசமமாக்கிக்கொண்டார்.

இடைவேளையின் பின் விளையாட்டு மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இறுதியில் விளையாட்டு முடிவதற்கு எட்டு நிமிடங்கள் இருக்கையில் டயமன்ஸ் கோஷ்டி தொடர்ந்து மூன்று கோல்களைப் போட்டது. டயமன்ட்ஸ் கோஷ்டியினர் யூனியன் கோஷ்டியினரை 4-1 கோல்களினால் தோற்கடித்தனர். டயமன்டஸ் கோஷ்டிக்கு க[illegible]னம் கமலாகரனும் யூனியன் கோஷ்டிக்கு நே. துரையும் காப்டன்களாக விளையாடினார்கள். திரு. சண்முகராசா மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

## கொழும்புத்துறை மார்க்கெட்

### மேயருக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், புதன்
கொழும்புத்துறையிலுள்ள ஒரே ஒரு பொது விற்பனை மார்க்கெட்டான மீன் சந்தையைப் புதிதாக நிர்மாணிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி கொழும்புத்துறை கிழக்கு சனசமூக நிலையம் யாழ்ப்பாணம் முனிசிபல் சபை மேயருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியுள்ளது.

இங்கு தினமும் கூடும் வாடிக்கைக்காரர்களின்பொது நலனை உத்தேசித்து மோசமான நிலையிலிருந்து வரும் இன்றைய சந்தைக் கட்டடத்தை முற்றாக உடைத்துவிட்டு அதற்குப்பதிலாக இன்னொரு கட்டடம் அமைக்க வேண்டுமென சனசமூக நிலையம் அதன் விண்ணப்பத்தில் கோரியுள்ளது.

சந்தைக்கட்டடம் இன்றிருக்கும் நிலையில் இங்கு கூடுவோருக்கு ஆபத்தைத் தரக்கூடியதாயிருக்கிறதென்று தெரிவித்து சில நாட்களுக்கு முன்பாக நடைபெற்ற ஒரு விபத்தையும் இதனால் ஒருவர் படுகாயமுற்று ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதையும் சனசமூக நிலையம் குறிப்பிட்டுக்காட்டியுள்ளது.

## இலங்கை தேயிலை உற்பத்தி

### 1 கோடி றாத்தல் அதிகரிப்பு

கொழும்பு, புதன்
1962-ம் வருஷத்திய தேயிலை உற்பத்தி அதற்கு முந்திய வருஷ உற்பத்தியைக் காட்டிலும் 1 கோடி றாத்தல் அதிகரித்திருக்கிறது.

## மட்பாண்டத் தொழிலாளர் கவலை

கொழும்பு, புதன்
மட்பாண்ட கைத்தொழிலின் வருங்காலம் குறித்து கவலை தெரிவிக்கும் ஒரு செய்தி ஊரெங்கும் பொங்கல் பண்டிகை கொண்டாடி ஓய்ந்திருக்கும் இன்றைய தினம் வெளிவந்திருக்கிறது. அலுமினியப் பாத்திர கைத்தொழில் இலங்கையில் பலவிடங்களில் தோன்றியிருப்பதையும் அலுமினியப் பாத்திரங்களின் புழக்கம் பொதுவாக அதிகரித்துவருவதையும் இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள மட்பாண்டக் கைத்தொழிலாளர் சுட்டிக்காட்டி அலுமினிய கைத்தொழில் தங்களின் வருங்காலத்தைப் பெரிதும் பாதிக்க விருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாண்டு பொங்கல் பண்டிகையின்போது மண்பானைகளுக்குப் பதிலாக அலுமினியப் பாத்திரங்களைப் பலர் வாங்கி உபயோகித்தமை அலுமினியப் பாத்திரங்களின் உபயோகம் பொதுவாக நாடெங்கிலும் அதிகரித்துவருகிறதென்பதைப் புலப்படுத்துவதாயிருந்தது.

## வானொலி நிகழ்ச்சிகள்

வெள்ளி 18-1-63
(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

### கொழும்பு

காலை: 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 பரிமளதேவி விவேகானந்தர்—பக்திப் பாடல்கள், 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராம சஞ்சிகை, 6-45 கோட்டு வாத்தியம்.

இரவு: 7-00 ஞானாஞ்சலி, 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 அம்பிகா தாமோதரம்-ஞான சிவசுப்பிரமணியம்—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை: 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-35: இசைக்கோவை.

பகல், 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரலிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை: 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி அஞ்சலி, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு: 7-30 பொங்கி எழும் பாரதம் (சென்னை அஞ்சல்), 7-45 ராதா-ஜெயலக்ஷ்மி-பாட்டு, 9-15 பலசரணி, 9-30 சென்னை அஞ்சல், 9-45 இசைமாலை, 9-55 வெற்றிப் பாதையில்—சித்திரம்.

## வருமான வரிகட்டத் தவறியவர் கோர்ட்டில் ஆஜர்

கொழும்பு, வியாழன்
ஓய்வு பெற்ற உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. லயனல் டி. எஸ். குணத்திலக்கா வருமானவரி செலுத்தத் தவறியதை தொடர்ந்து கொழும்பு மாஜிஸ்டிரேட் திரு எம். சிறிமன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார். 1958,59-ம் வருடத்திற்கான வருமான வரித் தொகை 10,080 ரூபாவையும் கட்டத்தவறியதினால் கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார். இவ்வழக்கு அடுத்த மாதம் 13-ம் திகதிக்கு ஒத்தி போடப்பட்டுள்ளது.


# வீடு வாடகை|விற்பனை, காணி குத்தகை|விற்பனை, பொருள்கள் வாங்க|விற்க இலகுவான வழி.

## ஈழநாடு சிறு விளம்பர விகிதங்கள்

### விளம்பரப் பிரிவுகள்

**பிரிவு 1.**
பிறப்பு, இறப்பு, திருமணம், அழைப்பிதழ், வாழ்த்து, அனுதாப விளம்பரம், தனிப்பட்டவிஷயம், பொருள்களைக் காணவில்லை, பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன முதலியன.

பி. கு. திருமண விளம்பரமாயின், மணமக்களது கையொப்பமும், இறப்பு விளம்பரமாயின் இறந்தவரது உரிமையாளரின் கையொப்பமும் தேவை.

**பிரிவு 2.**
வேலை தேவை, வேலை காலி, விளையாட்டு வகுப்புகள், டியூசன், வர்த்தக வகுப்புகள், நடன வகுப்புகள், புத்தகங்கள், சாஸ்திரம் முதலியன.

**பிரிவு 3.**
வீடு வாடகைக்கு, விற்பனைக்கு, காணி குத்தகைக்கு, விற்பனைக்கு, வீடும் சொத்தும், தங்குமிடவசதி, தோட்டம் முதலியன.

**பிரிவு 4.**
தாவர உற்பத்திகள், தெய்வகுப் பொருள்கள், கோழிப் பண்ணை, கால்நடை, செடிகள், விதைகள், உரம் முதலியன.

**பிரிவு 5.**
சைக்கிள், மோட்டார் சைக்கிள், வானொலிப்பெட்டி, கடிகாரம், தையல் இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள், மோட்டார் உறுப்புகள், கார்கள், லொறிகள், புகைப்படச் சாதனங்கள், தட்டெழுத்துப் பொறிகள், அலுவலக உபகரணங்கள், எஸ்டேட் சப்ளைஸ், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், டிராக்டர்கள், றெயிலர்கள், கட்டிடச் சாமான்கள் முதலியன.

**பிரிவு 6.**
வைத்தியம், மருந்துகளும் மூலிகைகளும், மருத்துவம் முதலியன.

**பிரிவு 7.**
வர்த்தக அறிவித்தல்கள், பணவசதி, ஈட்டுக்குப் பணம், வியாபார ஸ்தலங்கள் முதலியன.

**பிரிவு 8.**
ஆபரணங்கள், இசைக்கருவிகள், அழகுக்கலை முதலியன.

ரூ. 50க்குக் குறைந்த பெறுமதியான பொருள்களின் விளம்பரங்களாயின், முதல் 10 சொற்களுக்கும், ரூ. 2-00 வீதமும் அதற்குக் கூடுதலான ஒவ்வொரு சொற்களுக்கும், 10 வீதமும் அறவிடப்படும்.

விளம்பரத்தில் குறிப்பிடப்படாத விளம்பரதாரர்களின் பெயர்கள் எக்காரணம் கொண்டும் எம்மால் அறிவிக்கப்பட மாட்டாது.

'ஈழநாடு' மேற்பார்வையில் அமையும் விளம்பரங்களுக்கு நூற்றுக்கு 50 வீதம் வேறாக அறவிடப்படும்.

தபாற் பெட்டி எண் குறிப்பிட்ட விளம்பரங்களாயின், மேலதிகமாக 5 சொற்கள் கூட்டி எண்ணப்படும்.

| சொற்கள் | ஒருமுறை பிரசுரிக்க. | 3ம் முறைக்கு மேற்பட்ட பிரசுரங்களுக்கு. வீதம் |
|---|---|---|
| 15 | ரூ. 3-50 | ரூ. 3-00 |
| 16 | 3-60 | 3-10 |
| 17 | 3-70 | 3-20 |
| 18 | 3-80 | 3-30 |
| 19 | 3-90 | 3-40 |
| 20 | 4-00 | 3-50 |
| 21 | 4-10 | 3-60 |
| 22 | 4-20 | 3-70 |
| 23 | 4-30 | 3-80 |
| 24 | 4-40 | 3-90 |
| 25 | 4-50 | 4-00 |
| 26 | 4-60 | 4-10 |
| 27 | 4-70 | 4-20 |
| 28 | 4-80 | 4-30 |
| 29 | 4-90 | 4-40 |
| 30 | 5-00 | 4-50 |
| 31 | 5-10 | 4-60 |
| 32 | 5-20 | 4-70 |
| 33 | 5-30 | 4-80 |
| 34 | 5-40 | 4-90 |
| 35 | 5-50 | 5-00 |
| 36 | 5-60 | 5-10 |
| 37 | 5-70 | 5-20 |
| 38 | 5-80 | 5-90 |
| 39 | 5-90 | 5-40 |
| 40 | 6-00 | 5-50 |

40க்கு மேற்பட்ட ஒவ்வொரு சொல்லுக்கும் சதம் 1[illegible].

# பட்டப்பகலில் பஸ்சில் திருட்டு

## ஓட முயன்றவருக்கு ரிமாண்ட்

யாழ்ப்பாணம், வெள்ளி
கண்டாவளையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்த ஒரு இ. போ. ச. பஸ் யாழ்ப்பாணம் கன்வென்ட் பாடசாலைக்கருகில் வந்தபோது அந்தோனிப்பிள்ளை ஒகஸ்டின் என்ற ஐ. ஆர். சி. பஸ்ஸில் ஏறினர்.

பஸ் யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கருகில் வந்ததும் பஸ்ஸில் சத்தமொன்று கேட்டது. பஸ்ஸில் இருந்தவர்கள் இது பற்றி விசாரித்தபோது பழைய தபாற் கந்தோரைச் சேர்ந்த சேவகனான திரு. ஆறுமுகம் வீரகத்தி தமது சட்டைப்பையிலிருந்த பார்சலில் இருந்து ஒரு சோடி காப்பு, சங்கிலி உட்பட 500 ரூபாய் பெறுமதியான நகைகளைக் காணவில்லை என்று தெரிவித்தார்.

பஸ் சாரதி உடனடியாகப் பொலிஸ் நிலயத்திற்கு வண்டியைத் திருப்பினர். அந்தோனிப்பிள்ளை ஒகஸ்டின் பஸ்ஸிலிருந்து குதித்தோட முயலவே பஸ்ஸிலிருந்தவர்கள் அவர் மீது சந்தேகமுற்று அவரைப் பிடித்தனர். அவரிடமிருந்து காணமற்போனதாகக் கூறப்படும் பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

பொலிசில் ஒப்படைக்கப்பட்ட சந்தேகநபரை யாழ்ப்பாணம் இன்ஸ்பெக்டர் திரு. வல்லிபுரம் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்செய்தார். மாஜிஸ்டிரேட் சந்தேகநபரான கரையூரைச் சேர்ந்த ஒகஸ்டினை இம்மாதம் 22-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

---

# யாழ்ப்பாணப் பகுதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றைச் சமர்ப்பிக்கத்தாம் உத்தேசிக்கவில்லை என்றும், இப்போது அந்த விஷயங்கள் விவாதிக்கபபட்டால் அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் முயற்சிகள் பாதிகாக்கப்படும் என்றும் திரு. பீலிக்ஸ் இதற்குப் பதிலளித்தார்.

பருத்தித்துறையிலும், யாழ்ப்பாணத்திலும் கடந்தவாரம் நடைபெற்ற பொலிஸ் தாக்குதல் பற்றி அரசாங்கம் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பதாகக் கூறியிருந்தது என உடுவில் எம். பி. திரு தர்மலிங்கம் ஞாபகப்படுத்தினர். அதை இப்போது சமர்ப்பிக்கலாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா பதிலளிக்கையில், இதில் ஒரு கட்சியின் புகாரே கூறப்பட்டுள்ளதென்றும், மறு கட்சியின் பதில் கோரப்பட்டிருப்பதாயும், மறு கட்சியின் அறிக்கை கிடைத்தபின்பே விசாரணை பற்றி முடிவு செய்யப்படும் என்றும் கூறினர்.

# அநீதி நீடிக்குமானல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்குமென ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்" என்று டாக்டர் சுப்பிரமணியம் தமது திறப்பு விழா உரையில் கூறினர்.

இத் திறப்பு விழாவைத் தொடர்ந்து நடைபெற்ற பகிரங்கக் கூட்டத்திற்கு சென். தோமஸ் கல்லூரியின் முன்னள் அதிபரும் உயர்கலைக் கழகத்தின் மனேஜிங் டைரக்டருமான திரு. ஜே. ஹண்டி தலைமைவகித்தார். அவர் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

### கல்வியின் தரத்தை குறைத்துவிடுகிறது

"தகுதி நோக்காது நடைபெற்றுவரும் இன்றைய வகுப்பேற்றம் கல்வியின் தரத்தைக் குறைத்துவிடுகிறது. இந்த கல்வி முறையினல் எஸ். எஸ். ஸியில் பிள்ளைகள் சித்தி பெருதுவிடுகின்றனர். இந்தக் கல்வி முறையால் பிள்ளைகளின் சக்திவிரயமாக்கப்படுவதுடன் வேலையில்லாத் திண்டாட்டமும் ஏற்படுகிறது. இதுவே இந்நாட்டில் இன்று குற்றம் அதிகரிப்பதற்குக் காரணமாகவிருக்கிறது. இலங்கையின் கல்வித் திட்டம் உதவாதவொன்ருகும். பாடசாலைகளின் நோக்கமும் பிள்ளைகளின் எதிர்காலமும் பாதிக்கப்படாதவாறு கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்படவேண்டியது அவசியம்."

முதலியார் செ.சின்னத்தம்பி மெலும் பேசுகையில் இன்றைய கல்வித் திட்டத்தினல் நாட்டில் நல்லவன் இல்லாமற் போய்விடுவான்" என்றும் பயனற்றதுடம் நஷ்டத்தையே விளைவிக்கக் கூடியதுமான கல்விக் கொள்கை அநீதியான முறையில் தமிழர் மீது திணிக்கப்பட்டு புறக்கணிப்பு நடைபெறுவதாகவும், நமக்குத் தேவையான பலவற்றை உற்பத்தி செய்யாவிடினும் பிள்ளைகளை அதிகளவில் உற்பத்தி செய்யும் நாம் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்துச் செயல்பட வேண்டியது அவசியமென்றும் கூறினர்.

### நல்ல மனிதர்கள் இல்லாதுபோய்விடும்

முன்னள் சிவில் சேவை உத்தியோகத்தர் திரு. வி. வைரமுத்து பேசியதாவது:-

உலகத்தில் விரைவாக பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இலங்கையின் கல்வித் துறையில் நிமிஷத்துக்கு நிமிஷம் பல மாற்றங்கள் சுற்று நிருபங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்டு மயக்கமான நிலமை உருவாக்கப்பட்டு வருகிறது. பாடசாலைகளால் வெளியேறும் இளைஞரின் இந்தக் கல்வித்திட்டத்தினல் எதையும் செய்யலாயக் கற்றவர்களாக்கப்பட்டு வருகிருர்கள். இன்னும் நான்கு வருங்களுக்கிடையில் நல்ல மனிதர்கள் தோற்ற முடியாது போய்விடும். இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்கள் எதுவித உதவியும் செய்யப்படாது அரசாங்கத்தால் புறக்கணிக்கப்பட்டு வருசிறது. எங்கள் முன்னேற்றத்தில் தேடுவாரற்ற நிலமை உருவாக்கப்பட்டு வருகிறது. இந்தமடைமைத்தனம் நிறைந்த சீர்கேடான நிலமை மாற்றியமைக்கப்படவேண்டும்.

உயர்கலைக்கழக காரியதரிசி திரு. இராசநாயகம் நன்றி கூறினர்.

# கடாங்கா தலைநகரில் காங்கோ தேசியக்கொடி

எலிஸபெத்வில்லி, ஜன. 17
கடாங்காவின் பிரிவினை முடிவடைந்துகாங்கோமத்திய அரசாங்கத்துடன் அது இணைந்துவிட்டதைக் குறிக்குமுகமாக காங்கோ மத்திய அரசாங்கத்தின் தேசியக்கொடி கடாங்கா தலைநகரான எலிஸபெத்வில்லியில் ஏற்றப்பட்டது.

இதே சமயம் கடாங்கா பிரிவினை முடிந்துவிட்டதென்பதை கடாங்கா அதிபர் ஷோம்பே முறைப்படி காங்கோ அரசாங்கத்துக்கு கடிதமூலம் அறிவித்தார்.

கடாங்காவின் சுங்க, தபால் தந்தி இலாகா காரியாலயங்களை காங்கோவிலிருந்து வந்த 300 சிவில் ஊழியர்கள் பொறுப்பேற்றனர்.

கடாங்கா பொலிஸ்படையும் காங்கோ அரசாங்கத்துக்கு விசுவாசம் தெரிவித்து பிரமாணம் எடுத்துக்கொண்டது.

# 'உத்தியோகத்தை நம்பும் மனேபாவம் நீங்கவேண்டும்'

## இளைஞர்களுக்கு நீதிபதி புத்திமதி

யாழ்ப்பாணம், வியாழன்

"வேலைவாய்ப்புக்கள் குன்றி வேலையில்லாத் திண்டாட்டம் உச்சக்கட்டத்தை அடைந்துவரும் இந்நேரத்திலும் இளைஞர் பலர் உத்தியோகத்தை நம்பியிருக்கிருர்கள். இந்த மனேபாவம் இளைஞர்களிடம் இருக்கும்வரை நாட்டின் பொருளாதாரமும் அவர்கள் நிலையும் எதிர்காலமும் மோசமான இருள்சூழ்ந்ததாகிவிடும்" என்று யாழ்ப்பாணம் மேலதிக மாவட்ட நீதிபதி திரு. சி. தனபாலசிங்கம் யாழ்ப்பாணம் நாவலர் விவசாயிகள் கழக 6-வது ஆண்டு விழாவில் பேசும்போது கூறினர்.

நாவலர் விவசாயிகள் கழகத்தின் 6-வது ஆண்டுவிழாவும் பொருட்காட்சியும் குளங்கரைப் பாடசாலை மண்டபத்தில் கழகத் தலைவர் திரு. க. பரமசாமி தலைமையில் நடைபெற்றது. பொருட்காட்சியை உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. இ. வே. கந்தசாமி திறந்துவைத்தார். விழா ஆரம்பத்தில் திரு. டி. இராசலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

இக்கழகத்தின "இளம் உழவன்" 6-வது ஆண்டுமலரை வித்துவான் ந. சுப்பையாபிள்ளை வெளியிட்டுவைத்துப் பேசுகையில், நாவலர் பெருமானின் நாமத்தோடு கூடிய இக்கழகத்தின் மலர் உழவர்களுக்கெல்லாம் பயனளிக்குமென நம்புவதாகத் தெரிவித்தார்.

திரு. தனபாலசிங்கம் மேலும் பேசுகையில், பொருளாதாரத்தை வளம்படுத்துவதில் இளம் விவசாயிகள் முன்னிற்க வேண்டுமென்றும், ஒவ்வொரு இளைஞனும் உத்தியோகத்தை நம்பியிராது விவசாயத்தில் ஈடுபடவேண்டுமென்றும் கூறினர்.

திரு.வி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

இன்று அரசாங்கத்தால் நடைமுறையில் கொண்டுவரப்பட்டிருக்கும்நெற்காணிச்சட்டம் ஏழைவிவசாயிகளுக்குப் புத்துயிர் அளித்துள்ளது. இச்சட்டம் இன்னும் நன்கு பயன் பெறுவதற்கு ஒவ்வொரு இளம் விவசாயியும் இதை ஒவ்வொரு பாமர விவசாயிக்கும் விபரித்து அவர்களின் கஷ்டத்தை நீக்கி அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டும்.

திரு. சோ. செல்வராஜலிங்கம், திரு. மு. இராசரத்தினம் ஆகியோரும் பேசினர். கீதாஞ்சலி திரு. வி. கே. நல்லையாவின் மாணவி பரதநாட்டியம் ஆடினர். "உலகம் மாறவில்லை" என்ற நாடகமும் நடைபெற்றது கழகக் காரியதரிசி திரு. பி. .சோமசுந்தரம் நன்றி கூறினர்.

# 'பிரச்சினைகளை என்னிடம் கொண்டுவாருங்கள்'

## அரசாங்க எம். பி. க்களுக்கு பிரதமர் உரை

கொழும்பு, வியாழன்
அரசாங்கத்தின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் அரசாங்க எம். பி. க்கள் ஒத்துழைக்க வேண்டுமென பிரதமர் சிறிமா இன்று அரசாங்கக்குழு அங்கத்தவர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டார்.

பிரதமர் மேலும் கூயதாவது:-

'எதுவித பிரச்சினையோ, கஷ்டங்களோ கருத்துவேறுபாடுகளோ இருந்தால் அவற்றை என்னிடம் நேரடியாகத் தெரிவித்தால் அவை அரசாங்கக் குழுக் கூட்டங்களில் பரிசீலனை செய்யப்படலாம். இவை பற்றி பகிரங்கமாகவோ பொதுக்கூட்டங்களிலோ பேசக்கூடாது. உங்களிடையே இருக்கும் கருத்துவேற்றுமைகளை நீக்கி, தேச நலனுக்காக ஒற்றுமையாக உழைக்குமாறு நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.'

பிரதமர் பீக்கிங் புதுடில்லி ஆகிய தேசங்களுக்கு தாம் விஜயம்செய்தது பற்றிக் குறிப்பிடுகையில் கொழும்பு மகாநாட்டின் முடிவை வெளியிடுவதற்கு இந்த மகாநாட்டில் கலந்துகொண்ட நாடுகளின் அங்கீகாரத்தைக் கோரியுள்ளதாகத் தெரிவித்தார்.

'கொள்ளையடிக்கும் மேல் நாடுகள்' எனத்தாம் குறிப்பிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளதை பிரதமர் மறுத்தார். கிழக்கு நாடுகளிடையே ஏற்பட்ட பூசல்கள் தான் காலனி ஆதிக்க வளர்ச்சிக்கு வழிவகுத்தது என்று தாம் அன்று கூறியதாக அவர் சுட்டிக்காட்டினர். தெற்கு, தென்கிழக்கு ஆசியநாடுகளின் விவகாரங்களில் மேற்கு நாடுகள் மீண்டும் தலையிடுவதற்கு இந்த நாடுகள் வழி வகுத்துவிடக்கூடாது என பிரதமர் கேட்டுக்கொண்டார்.

### பாண்டேஜுக்கு தட்டுப்பாடு ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் 'பாண்டேஜ்' துணிகள் விட்டமின் 'பி' மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதனல் பெருமளவில் நோயாளர்கள் கஷ்டத்திற்குள்ளாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்கள் கடந்த இரு தினங்களாக வெளியிலிருந்தே 'பாண்டேஜ்' துணிகள்கொண்டு செல்வதாகத் தெரிகிறது. வெளியில் பணம் கொடுத்து வாங்கமுடியாத ஏழைகள் இதனல் பெரும் அவதிக்குள்ளாகியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.


## தேவை

அங்கீகரிக்கப்பட்ட தோட்டப்பாடசாலைக்கு உடனே உதவி ஆசிரியை தேவை. 25 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது. நேரில் விண்ணப்பிக்கவும்.


நம்.56, பெரியகடைமார்க்கட்.
யாழ்ப்பாணம்.



## இப்பொழுது நடைபெறுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) ராஜ் (நீர்கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடேர்ன் (பதுளை)
ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) ஜுபிட்டர் (குருநாகல்) லக்ஷ்மி (இரத்தினபுரி)
தீவொளி (நுவரேலியா) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ருவலை)

காதுக்கினிய பாடல்களும், திடுக்கிடும் சண்டைக் காட்சிகளும் நிறைந்த படம்



எம். ஜி. ராமச்சந்திரன், பத்மினி, ராகினி
எம். என். நம்பியார், எம். என். ராஜம்
எம். ஜி. சக்கரபாணி, கே. ஏ. தங்கவேலு
எம். எஸ். சரோஜா, மோகனு
மற்றும் பலர் நடித்த

# ராணி சம்யுக்தா

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
டைரக்ஷன் டி. யோகானந்த்

## மனேகரா

(யாழ்ப்பாணம்)
ஜெமினி கணேசன், சரோஜா தேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
கல்யாணப் பரிசு


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.